Registered as a news paper. பக்கங்கள்: பத்து விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்


NEW NAVENA NAKAIYAKAM
நியூ நவீனா நகையகம்
189, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
189, Kasthuriar Road,
Jaffna.
(சி-244)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2033 கார்த்திகை 29 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 ஷவ்வால் 10 (15.12.2002) ஞாயிற்றுக்கிழமை இதழ் : 75


முகமாலைச் சந்திப்பில் கேணல் கருணா, ஒஸ்ரின்

## அபிவிருத்தி, புனர்வாழ்வுக்குழு கிளிநொச்சியில் இன்று கூடுகிறது

(கிளிநொச்சி)

வட-கிழக்கு புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்திக்கான உப குழுவின் கூட்டம் இன்று கிளிநொச்சியில் நடைபெறவுள்ளது.

கிளிநொச்சியில் உள்ள வட கிழக்கு அபிவிருத்தி மற்றும் புனர் வாழ்வுச் செயலகத்தில் நடைபெற விருக்கும் மேற்படி கூட்டம் மாலை 2 மணியளவில் ஆரம்பமாகவுள்ளது.

இக்கூட்டத்தில் நோர்வேத் தூதர் ஜோன் வெஸ்ட்போர்க் மற்றும் சமாதான செயலணித்தலைவர் பேணாட் குணதிலக தலைமையில் அரச தரப்புக்குழு, மற்றும் ஜப்பானிய குழுவினரும் பங்குபற்றுவார்கள்.

விடுதலைப் புலிகள் தரப்பில் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன், புலிகளின் முக்கிய பிரமுகர் வே.பாலகுமாரன், நிர்வாக சேவைகள் பொறுப்பாளர் பூவண்ணன், பொருளாதார நிபுணர் ஜோய் மகேஸ்வரன் ஆகியோர் பங்கு பற்றவுள்ளனர்.

மேற்படி உபகுழுவின் கூட்டம் இன்றும் நாளையும் நடைபெறும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

(க)

### புனர்வாழ்வுச் செயலகம் இன்று திறப்பு விழா

வட.கிழக்குக்கான அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வு செயலகம் இன்று கிளிநொச்சியில் வைபவரீதியாக திறந்து வைக்கப்படவுள்ளது.

கிளிநொச்சி அரச செயலக வளாகத்தில் உள்ள கட்டிடத்தில் அமைக்கப்பட்டிருக்கும் இவ் அலுவலகம், இன்று காலை 10 மணியளவில் திறந்து வைக்கப்பட்டதும், அலுவலகத்தின் அனைத்து செயற்பாடுகளும் அரம்பிக்கப்படவிருக்கின்றன. இவ் அலுவலகத்தின் ஒவ்வொரு பகுதிக்கும் பொறுப்பான அலுவலர்களும் இன்று நியமிக்கப்படவுள்ளனர்.

(க)

# ஒரு வார காலத்துக்குள் மீள்குடியமர்வு அறிவிப்பு

## அரசுக்குப் புலிகள் கால அவகாசம்

(முகமாலையிலிருந்து கணேஷ், லிவிங்ஸ்டன்)

**மக்களின் மீள்குடியமர்வுக்காக உயர் பாதுகாப்பு வலயப்பகுதிக்குள் குறிப்பிட்ட பிரதேசம் ஒன்றை- அரசு "மீள்குடியேற்றப் பிரதேசமாக" பிரகடனம் செய்ய வேண்டும். இம்மாதம் இருபத்தோராம் திகதிக்கு முன்னதாக மேற்படி மீள்குடியேற்றப் பிரதேசத்தை அரசு இனங்கண்டு அறிவிக்கவேண்டும். இப்பிரதேசத்தில் ஒரு மாதகாலத்துக்குள் மக்களின் இயல்பான மீள்குடியேற்றம் முழுமையாக நடைபெறவேண்டும். தவறின், இனிவரும் உபகுழுக் கூட்டங்களில் பங்கேற்பதில் பயனில்லை என விடுதலைப்புலிகளின் மூத்த தளபதி கேணல் கருணா முகமாலையில் அறிவித்தார்.**

கடுமையான வாதப் பிரதிவாதங்களுடன் மிகவும் இறுக்கமான சூழலில், தீர்க்கமான முடிவுகளுக்காக, நீண்டநேரமாக நேற்றைய பாதுகாப்பு உபகுழுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தின் இறுதியில் கேணல் கருணா செய்தியாளர்களைச் சந்தித்தார்.


'இன்றைய பேச்சுக்களின் போது தீர்க்கமான முடிவுகளுக்காக நாம் நீண்டநேரம் பேசினோம். அரசு, மக்களின் மீள்குடியேற்றம் தொடர்பான விடயத்தில் உடனடியாக தீர்க்கமான நடவடிக்கை எடுக்க வேண்டும்.குறிப்பிட்ட பகுதியில் மீள்குடியேற்றப்பிரதேசத்தை தெரிவு செய்து அங்கு ஒருமாத கால இடைவெளிக்

(10ஆம் பக்கம் பார்க்க)


பேச்சுக்கு வரும் புலிகள் குழுவினர்

## தீர்வுக்கு கடைசிச் சந்தர்ப்பம் சிக்ஸர் அடித்தாலே வெற்றி

### ஐ.தே.க. மாநாட்டில் பிரதமர் ரணில்



(கொழும்பு நிருபர்)

இதுவே இனப்பிரச்சினைத் தீர்வுக்கான இறுதிச் சந்தர்ப்பம். இதனை உறுதியாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும், என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் வருடாந்த மாநாட்டில் உரையாற்றியபோதே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நேற்று சுகததாஸ விளையாட்டரங்கில் ஐ.தே.வின் வருடாந்த மாநாடு நடைபெற்றது.

ஆட்சியைப் பொறுப்பேற்றபோது யுத்தத்தை தொடர்ந்து நடத்தியிருந்தால் நாடு சீரழிந்திருக்கும். சமாதானமே இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான ஒரே வழி.

நாட்டில் நிரந்தர சமாதானம் ஏற்படுத்தப்படுமானால் 20 லட்சம் பேருக்கு உடனடி வேலைவாய்ப்பு வழங்கப்படும்.

(10ஆம் பக்கம் பார்க்க)

## இறுக்கமான நிலையில் நடந்த பாதுகாப்பு உபகுழுக் கூட்டம்

(முகமாலை)

இருதரப்பும் விட்டுக் கொடுப்புகளற்ற - மிகவும் இறுக்கமான நிலையில் நேற்றைய தினம் முகமாலையில் நடைபெற்ற பாதுகாப்பு உப குழுவின் கூட்டம் நிறைவடைந்தது.

முகமாலை சூனியப்பிரதேசத்தில விசேடமாக அமைக்கப்பட்ட கொட்டகை ஒன்றில் நடைபெற்ற நேற்றைய பாதுகாப்பு உபகுழுவின் கூட்டத்திற்கு, காலை 9 மணியளவில், விடுதலைப் புலிகளின் விசேட கொமாண்டோப் பிரிவினர் பாதுகாப்பு

(10ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்க அமெரிக்கா முயன்றால் ஆட்சேபியோம்

### அமைச்சர் பீரிஸ் அறிவிப்பு

(கொழும்பு)

அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகள் விடுதலைப்புலிகள் மீதான தடையை நீக்குவதற்கு முன்வந்தால், தாம் எவ்வித ஆட்சேபனையையும் தெரிவிக்கப் போவதில்லையென்றும், இடையூறாகவும் இருக்கப் போவதில்லை என்றும் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

கொழும்பில் நடந்த வைபவமொன்றில் செய்தியாளர்களுடன் பேசும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

நடைபெற்றுவரும் பேச்சுக்களை அமெரிக்கா, பிரிட்டன், உட்பட உலக

(10ஆம் பக்கம் பார்க்க)

### விண்ணாணம் விநாசியர்


கிளீன் போல்டாகக் கூடாதெண்டது அவருக்கு வீளங்கிட்டுது பார்த்தியே..

## ஈ.பி.டி.பி. நெடுந்தீவிலிருந்து வெளியேற்றப்படவே வேண்டும்!

### புலிகள் முகமாலையில் வலியுறுத்து

(முகமாலை)

"ஜனநாயக நடவடிக்கை என்று கூறிக் கொண்டு ஈ.பி.டி.பி என்ற காட்டுமிராண்டிக் கும்பல் நெடுந்தீவில் மக்களின் விருப்புக்கு விரோதமாக தங்கியிருந்து செயற்படுகிறது. இவர்களை அங்கிருந்து வெளியேற்றுவதற்கு அரசு உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும் - இவ்வாறு விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி கேணல் கருணா தெரிவித்தார். நேற்றைய முகமாலைக் கூட்டத்தின் இறுதியில் செய்தி

(10ஆம் பக்கம் பார்க்க)

நத்தார் ,புதுவருடத்திற்கான சிறப்பு தள்ளுபடியில் Computer விற்பனை

AMD 950 Mhz
Gigabyte Mother Board
32MB VGA / 32Bit Sound
128 MB Memory
20.0 GB Hard Disk
1.44MB Floppy Drive
ATX P4 Tower Casing
Key Board & Mouse
440W Speaker

29,500/= மட்டும்

ஒரு வருட உத்தரவாதம்

❖ கையிருப்பில் இருக்கும் வரை மட்டுமே...
❖ இலகு கொடுப்பனவு வசதிகள்
❖ விரைவான விற்பனைக்குப் பிந்திய சேவை

FREE
உங்கள் தேவைக்கேற்ப அனைத்து software களும் Install செய்து தரப்படும்.

Programe எழுதுவதற்கு, Packegeas பழப்பதற்கு
Multimedia படங்கள், பாடல்கள்
InterNet, E-Mail பார்ப்பதற்கு
New Software போடுவதற்கு
இன்னும் பல...
Game விளையாடுவதற்கு



இவ் வருடத்திற்கான இறுதிச் சலுகை தவறவிடாதீர்கள்

எமது மேலதிக சேவைகள்

SALES :- Computer, Accessories, Printers, Scanners
UPS, Photocopier, & All Other Electronic Equipments
REPAIRS & MAINTENANCE :-
Installations, Network Maintenance,
Computer repairs & Upgrading
SOFTWARE DEVELOPING :-
Financial, Communication, Multimedia
& Web Designing

SDS Computer Services
No 178(114), Arasady Road , Kandarmadam Jaffna
Hotline : 077- 7726292 Tel : 021 - 2223251


# விளான் குளத்தில் விகாரை எதிர்த்து தமிழர் போராட்டம்

(கொழும்பு)

திருகோணமலையில் விளான் குளம் பகுதியில் பௌத்த விகாரை ஒன்றை பலவந்தமாக அமைக்கும் முயற்சியை எதிர்த்து அப்பகுதி மக்கள் போராட்டம் நடாத்தி வருகின்றனர்.

இராணுவத்தினரின் உதவியுடன் பௌத்த பிக்கு ஒருவரின் தலைமையில் சிங்களவர் கொண்ட குழு ஒன்று தமிழ்மக்கள் வாழும் இப்பகுதியில் விகாரை அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. இதுகுறித்து, அப்பகுதி மக்கள் அமைச்சர் மகேஸ்வரனுக்கு மகஜர் ஒன்றையும் அனுப்பிவைத்துள்ளனர்.

1983 இல் இப்பகுதிலிருந்து தமிழ்மக்கள் படையினரால் விரட்டியக்கப்பட்ட பின் இராணுவ முகாம் ஒன்று இப்பகுதியில் அமைக்கப்பட்டது. மீண்டும் தற்போது மக்கள் மீளக்குடியமர அங்கு சென்ற போது அங்கு விகாரை அமைக்கும் முயற்சி நடைபெறுவதை கண்ணுற்று தமது எதிர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.


சிறு விளம்பரம்

CANADA STUDENT VISA
கனடாவில் Student Visa பெறுவது தொடர்பான விபரங்களுக்கு
இல.140, பலாலி வீதி,
பரமேஸ்வரா சந்தி,
திருநெல்வேலி,
T.P.No.2222478 (064)

ராஜா யாழ்ப்பாணம்.
ஆறாவது வாரமாக
அஜித் (இரட்டை வேடம்)
கிரண், மீனா நடித்த
வில்லன்
காட்சிகள்: 10.30, 2.30, 6.30 (பு.நே)
இயக்கம்: K.S.ரவிக்குமார். (சி-262)



நிறஞ்சனாஸ் சங்கானை
இன்று முதல் முரளி, பிரதியூஷா, மனோஜ், உமா நடித்த
கடல் பூக்கள்
17ஆம் திகதி முதல்
AIR FORCE - I
காட்சிகள்:
11.00, 2.45, 6.00 (பு.நே) (சி-287)


## உளம் கனிந்த நன்றிகள்

நெல்லியடியில் நடைபெற்ற அசம்பாவிதங்களின்போது பாதிக்கப்பட்ட வர்த்தகர்களுக்காகவும் அப்பாவிப் பொதுமக்களுக்காகவும் குரல் கொடுத்த சகல அமைப்புக்களுக்கும், பொதுமக்களுக்கும், வணிகர் கழகங்களுக்கும் தக்க தருணத்தில் சமூகமளித்து, நெல்லியடி வர்த்தகர்கள் எதிர்நோக்கிய பிரச்சனைகளுக்கு சுமுகமான தீர்வைக்காண உதவிய, இந்துக்கலாச்சார அமைச்சர் கௌரவ தி.மகேஸ்வரன் அவர்களுக்கும் எமது உளங்கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(சி-315) நெல்லியடி வாணிபர்கழகம்


உறவுகளைப் பலப்படுத்துவோம்

கிறிஸ்மஸ், புதுவருடம், தைப்பொங்கல் பண்டிகைக்கான எமது கையடக்கத் தொலைபேசியின்

மொத்த விலைக் குறைப்பு

எமது வாடிக்கையாளர்களுக்கு 16.12.2002இல் இருந்து 1 மாத காலத்திற்கு இச்சலுகை வழங்கப்படும்.
(Kit இலவசமாக வழங்கப்படமாட்டாது)

ALCATEL புதியவிலை 10950/- பழையவிலை 12950/-
SAGEM புதியவிலை 9450/- பழையவிலை 12950/-

இது உங்களுக்கோர் அரிய சந்தர்ப்பம்

✲ அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் 5ற்கு மேற்பட்ட தொலைபேசிகளை வாங்கினால் மேலதிக விலைச் சலுகைகள் வழங்கப்படும்.
✲ தனியாகவும் இணைப்புக்கள் வழங்கப்படும்.

கவர்ச்சிகரமான சலுகைகள்

1. இரண்டு வருட உத்தரவாதம்
2. உள்வரும் அழைப்புக்கள் அனைத்திற்கும் 1 நிமிடம் இலவசம்
3. குறுந்தகவல் சேவை (S.M.S.)
4. சர்வதேச இணைப்புக்கள் ( I.D.D.)
5. உள்வரும் அழைப்புக்களின் இலக்கங்களை அறியும் C.L.I. வசதிகள் என்பன

சாவகச்சேரி, புலோலி, சங்கானை, காரைநகர் ஆகிய இடங்களில் புதிய கோபுரங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. மிகவிரைவில் குடா நாடு முழுவதும் அலைவரிசை விஸ்தரிக்கப்படும்.

DIAL LINKS
THE PHONE SHOP
தொலைபேசி:
0777736469
222-5485
இல. 204, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.


## இன்றைய நாள் இனிய நாள்

**15-12-2002 - ஞாயிற்றுக்கிழமை**

**சித்திரபானு வருடம், கார்த்திகை மீ, - 29ம் திகதி**
திதி :- *பூர்வபட்ச ஏகாதசி - இரவு - 7.22வரை அதன் மேல் துவாதசி*
நட்சத்திரம் :- *அச்சுவினி - இரவு - 11.22 வரை, அதன் மேல் பரணி*

**மேடம்** :- மனமகிழ்ச்சி, விருந்தோம்பல் நிறைவு, கலைநிகழ்ச்சியில் மகிழ்வு, தொழில் ஸ்தானத்தில் அமைதி, கலவியில் ஊக்கம் வேண்டும், வியாபார முன்னேற்றம்.

**இடபம்** :- உடல்நலக்குறைவு, மனம் நிம்மதியற்ற நிலை, தன்னையறியாத செலவு, மௌனநிலை நன்று, தொழில் ஸ்தானத்தில் நற்பெயர், கல்வி முன்னேற்றம், வியாபாரம் சமநிலை.

**மிதுனம்** :- தெய்வழிபாடு, சமயஅறிஞர் நல்லுறல்வு, கலை நிகழ்ச்சியில் ரசனை, தொழிற்சிறப்பு, கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

**கர்க்கடகம்** :- தெய்வசேவை, சமூகசேவை, தொழிற்சிறப்பு, புதிய தொழில் முயற்சியில் சிந்தனை, கல்வி முன்னேற்றம், வியாபாரம் சமநிலை.

**சிங்கம்** :- பிதா மனமகிழ்வு, தெய்வ வழிபாடு, மனதில் உற்சாகம், தொழில் ஸ்தானத்தில் அமைதி, கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபார முன்னேற்றம்.

**கன்னி** :- மனச்சஞ்சலம், மனப்பயம், உடல்நலக்குறைவு, புதிய காரியம் தொடங்குதல் நன்றல்ல, கல்வி முன்னேற்றம், வியாபாரம் சமநிலை.

யாழ். கொக்குவில் இ.சி.இரகுநாதையர்
அவர்களின் சகோதரரின் புத்திரர்
இ.வெங்கடேச ஐயர்.

**துலாம்** :- உளப்பூரிப்பு, உறவினர் நண்பர் சங்கமம், அறுசுவையுண்டி, மனதிற்கு இனிய பொருட்கள் கொள்வனவு, கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

**விருச்சிகம்** :- உடல்நலம் நன்று, பணவரவு, மனமகிழ்ச்சி, தொழிற்சிறப்பு, கல்வி முன்னேற்றம், வியாபாரம் சமநிலை.

**தனு** :- உடல்நலம் நன்று, மனதில் உற்சாகம், பிரயாண மகிழ்வு, தொழில் ஸ்தாபனத்தில் மௌனம், கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபர முன்னேற்றம்.

**மகரம்** :- நம்பிக்கை குறைவு, தேவையற்ற முறையில் கதைத்து அவமானப்படல், தொழில் முன்னேற்றம், கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

**கும்பம்** :- முயற்சி திருவினையாக்கும், பணவரவு, புதிய ஆடை அணிவதில் மகிழ்ச்சி, கலை நிகழ்ச்சியில் மகிழ்வு.

**மீனம்** :- வீண் செலவு, கௌரவக்குறைவு, வீட்டில் விவாத மேடை, எடுத்த காரியம் தடை, தொழில் முன்னேற்றம், கல்வியில ஊக்கம் வேண்டும், வியாபாரம் சமநிலை.

# பீரிஸை என்னிடம் அனுப்பவேண்டாம்

# பிரதமரிடம் ஜனாதிபதி கோரினாராம்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுடனான பேசசுக்களில் அமைச்சர் பீரிஸ் - அரசாங்கத்தரப்பில் பங்குபற்றி வநதாலும் பேச்சுக்கள் பற்றி விளககுவதற்கு அவரை என்னிடம் அனுப்ப வேண்டாமென, பிரதமருக்கு நான் உத்தரவிட்டுள்ளேன் - இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

அனுராதபுரத்தில் - சாலியபுர பகுதியில் இடம்பெற்ற திறப்பு விழா நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் தொடர்ந்து பேசுகையில் -

கடந்த பதினொரு மாதங்களாக அமைதியின் பெயரில், போலியான களியாட்டம் ஒன்று நடந்து வருகின்றது.

தற்போதைய பேச்சுக்களால் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் பற்றி எழுதச் சொன்னால், என்னால் ஐந்து வரிகள் கூட எழுதமுடியாது.

தேசிய அரசாங்கம் ஒன்று அமைபபதற்கு முயற்சிசெய்தபோதும் - அமைச்சரவையிலுள்ள சில அமைச்சர்களை என்னால் பொறுத்துக் கொள்ளமுடியாதுள்ளது. அவர்கள் அனைவரும் புலிகளுக்கு எவ்விதத்திலும் சளைத்தவர்களல்லர். என்றாலும் - சில நல்ல அமைச்சர்களும் இங்கு இருக்கவே செய்கின்றனர். என்றும் ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்தார்.

# சமாதானம் ஏற்பட்டிராவிடின் பொருளாதாரம் பாதிப்புற்றிருக்கும்

## தேசிய வர்த்தக சம்மேளனத் தலைவர்

(கொழும்பு)

இலங்கையில் சமாதானச் சூழ்நிலை ஏற்படாவிட்டால் இலங்கையின் பொருளாதாரம் இன்னும் பத்து வருடங்களுக்குப் பின்தள்ளப்பட்டிருக்கும் என்று தேசிய வர்த்தக சம்மேளனத்தின் தலைவர் சந்திரா அம்புல்தெனிய தெரிவித்துள்ளார்.

அத்துடன், தற்போது இடம்பெற்றுவரும் சமாதான முயற்சிகளுக்கு எல்லா அரசியல் கட்சிகளும் ஆதரவு வழங்கவேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

முஸ்லிம் காங்கிரஸ"க்குள் இடம்பெற்றுவரும் பிரச்சினைகள் சம்பந்தமாக அரசாங்கத்துக்கு நெருக்கடிகள் ஏற்பட வாய்ப்புக்கள் உண்டு என்றும் -


அதனால் சமாதானப் பேச்சு வார்த்தைகளுக்குப் முஸ்லிம்களின் புதிய தலைமைத்துவம் பங்குபற்ற முடியுமா? என்ற பிரச்சினையும் தோன்றியுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# இருபது வருடத்திற்கு மேலாக திருத்தப்படாத நாயன்மார் வீதி!

(நல்லூர்)

நல்லூர் நாயன்மார் வீதி இருபது வருடங்களுக்கு மேலாகத் திருத்தப்படாமல் மிக மோசமான நிலையில் இருப்பதனால், அப்பகுதி மக்களும், அவ்வீதியால் போக்குவரத்துச் செய்வோரும் பெரும் சிரமத்தை எதிர் நோக்கி வருகின்றனர்.

குன்றும் குழியுமாகவுள்ள மேற்படி வீதியின் நிலையை அப்பகுதி மக்கள், யாழ்.மாநகரசபை முதல்வர் மற்றும் உரிய அதிகாரிகள் ஆகியோர்களிடம் நேரடியாகக் காண்பித்து, எடுத்துக்கூறியும் இதுவரை எவ்வித பலனும் கிடைக்காததால் மக்கள் பெரும் விசனமடைந்துள்ளனர். (55)



மோசமாகப் பாதிக்கப்பட்ட நாயன்மார் வீதியைப் பார்வையிடும் யாழ். மாநகர மேயர்.

# 6 ஆயிரம் தென்னங்கன்றுகள் ஜனவரியில் இலவச விநியோகம்

தென்மராட்சிப் பகுதியில் கடந்த கால அனர்த்தங்களின்போது பாதிப்படைந்த தென்னந்தோட்டங்களை மீளப் புனரமைக்கும் நோக்கமாக 2003 ஆம் ஆண்டு தை மாத இறுதியில் 6,000 தென்னங்கன்றுகள் இலவசமாக வழங்கவுள்ளதாக தென்னை அபிவிருத்தி உத்தியோகஸ்தர் தெரிவித்துள்ளார்.

இதன்பிரகாரம் ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவிலும் பாதிப்படைந்தவர்களின் விபரங்களை அனுப்பி வைக்குமாறு, மேற்படி உத்தியோகத்தர் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் கேட்டுக் கொண்டார். (92)

# திரைக்கதை உருவாக்கல் பயிற்சி நாளை ஆரம்பம்

யாழ்.பல்கலைக்கழகப் புறநிலைப்படிப்புகள் அலகும், ஸ்கிறிப்ற்நெற் அமைப்பு இணைந்து நடாத்தும் திரைக் கதை உருவாக்கலுக்கான பயிற்சி முகாமிற்குத் தெரிவானவர்களுக்கான செயலமர்வு நாளை திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு ஜும்மா பள்ளிவாசல் வீதி, சிற்றி மண்டபத்தில் நடை பெறும் என புறநிலைப்படிப்புகள் அலகுகின் இணைப்பாளர் பேராசிரியர் சிவச்சந்திரன் அறிவித்துள்ளார்.

இப்பயிற்சிக்கு தெரிவானோர் விபரம்: ஐ.சாந்தன் (சுதுமலை), சா.சத்தியகீர்த்தி (யாழ்), செ.ஜமுனாராணி (அச்சுவேலி), சி.செல்வலிங்கம் (தொண்டமானாறு), ப.இந்திரகுமார் (பருத்தித்துறை), தவம் (திருநெல்வேலி), நா.விக்னேஸ்வரன் (திருநெல்வேலி), திலகன் (திருநெல்வேலி), ச.இராகவன் (கரவெட்டி), சு.யேசுராஜா (யாழ்), எஸ்.சுகந்தன் (யாழ்), க.கௌதமன் (மானிப்பாய்), டயஸ் (திருநெல்வேலி), எஸ்.ஜீவா (கொழும்பு), குயிலினி (திருநெல்வேலி), எஸ்.என்.ஜே.மரியாம்பிள்ளை (யாழ்ப்பாணம்), எஸ்.பிரணவன் (யாழ்), நிமலா (திருநெல்வேலி), பே.குகப்பிரியா (யாழ்), தி.பாஸ்கரன் (பருத்தித்துறை), ச.பிரேமினி (யாழ்), க.பிரபா (யாழ்), த.செல்வகுமார் (ஏழாலை), சி.சுதந்திரராஜா (கொக்குவில்), ச.சாரங்கா (சாவகச்சேரி), ப.சஞ்சியகாந் (மீசாலை), செ.உதயகலா (தெல்லிப்பளை), சு.நிஷாந்தன் (வவுனியா).

# கண்ணி அகற்ற இயந்திரம் 'ஹலோ ரஸ்ட்' கொள்வனவு

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் கண்ணிவெடிகள் அகற்றுவதில் "ஹலோ ரஸ்ட்" என்ற அமைப்பு ஈடுபடவுள்ளதாகத் தெரியவருகின்றது.

இதன் முதற்கட்டமாக இப்பிரதேசங்களில் கண்ணிவெடிகளை அகற்றுவதற்கு இரு நவீன இயந்திரங்களை இந்த அமைப்பு கொள்வனவு செய்துள்ளது.

கடந்த காலங்களில் இந்த அமைப்பைச் சேர்ந்த வெளிநாட்டு நிபுணர்கள் கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டுள்ள இடங்கள் சம்பந்தமான ஆய்வுகளை மேற்கொண்டிருந்தனர்.


மேலும், கண்ணிவெடிகளை அகற்றும் பணிக்கு 30 இளைஞர்களை இணைத்துக்கொள்ளவுள்ளதாகவும் தெரியவருகிறது.

# யூ.என்.எச்.சி.ஆருக்கு ஜப்பான் நிதியுதவி

ஜப்பானிய அரசாங்கம் அவசர உதவியாக ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலயத்துக்கு 16 லட்சம் டொலர்களை வழங்கத் தீர்மானித்துள்ளது. இந்தப்பணம், இலங்கையில் இடம்பெயர்ந்த மக்களுக்கு அவசர உதவிகளை வழங்கப் பயன்படுத்தப் படும்.

அண்மையில் ஒஸ்லோவில் நடைபெற்ற மாநாட்டில் ஜப்பானிய அரசாங்கம் நிதியுதவியை வழங்க உறுதியளித்திருந்தது.

இலங்கையில், வடக்கிலும் கிழக்கிலும் 8 லட்சம் முதல் 10 லட்சம் பேர் வரை இடம்பெயர்ந்திருக்கிறார்கள். அவர்களுக்கு மனிதாபிமான உதவிகள் வழங்கப்பட வேண்டுமென ஒஸ்லோ மாநாட்டில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. இந்த உதவிகள் இலங்கையில் எல்லாப் பாகங்களிலும், அனைத்துச் சமூகங்களுக்கும் கிடைக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



கோப்பாய் இந்து வாலிபர் சங்கத்தினால் நடத்தப்பட்ட கரப்பந்தாட்டப் போட்டியில் வெற்றியீட்டிய K.K.S. அணியின் தலைவர் கலைமோகன், பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கரப்பந்தாட்ட சங்கத் தலைவர் கப்டன் டி.ஏ.எம்.குணசிங்கத்திடமிருந்து பரிசு பெறும்போது எடுக்கப்பட்டபடம்.


MEDICAL CHECK UP
வைத்திய பரிசோதனை

நோய் வருமுன் காப்போம்!
திடீர் மரணத்தைத் தவிர்ப்போம்!

✺40 வயதுக்கு மேற்பட்ட நோய் உள்ள, நோய் அற்ற அனைவரும் இந்த MEDICAL CHECK UP ஐ செய்வதன் மூலம் நோயற்ற சுகவாழ்வு வாழலாம்.
✺X-RAY, ECG, சில முக்கிய இரத்தப் பரிசோதனைகள், சிறுநீர்ப் பரிசோதனை, இலவச வைத்திய ஆலோசனையுடன் கூடிய MEDICAL CHECK UP

குறைந்த கட்டணத்தில்! விவரங்களுக்கு நேரில்!

போக்குவரத்து வசதி கருதி

சம்பந்தர் மொடேர்ன் கிளினிக்

(அமுல் கிறீம் ஹவுஸ் அருகில்) ஆஸ்பத்திரி (முன்) வீதி, யாழ்ப்பாணம்.

(சி-237)



அறிவித்தல்

வெளிவாரியாகப் பட்டச்சான்றிதழ் பெறும் பட்டதாரிகள் கவனத்திற்கு

19.12.2002இல் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் புகைப்படம் எடுப்பதற்குரிய அனுமதியை 17.12.2002 இற்கு முன்னர் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

நேரம்: காலை 9 மணி தொடக்கம் மாலை 3 மணிவரை பதிவுசெய்துகொள்ளலாம்.

வெளிவாரிப் பட்டப்படிப்பு மாணவர் ஒன்றியம்
புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

(065)




சமைக்குமுன், பரிமாற முன், உண்ண முன், முக்கியமாக குழந்தைகளுக்கு உணவூட்ட முன், மலங்கழித்த பின், குழந்தைகள் விளையாடிய பின் கைகளுக்குச் சவர்க்காரமிட்டு நன்கு கழுவ வேண்டும்.

- தமிழீழ சுகாதார சேவை.

## சின்னஞ் சிறு செய்திகள்

### வெளி நாடு சென்ற ஆசிரியர்களுக்கு!

சம்பளமற்ற விடுப்பில் வெளிநாடு சென்று, ஆசிரியர் உள்ளீர்ப்பில் பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள்- அக்காலத்திற்கான சம்பள ஏற்றங்கள், நிலுவைகள் பெறாதவிடத்து கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு இன்று ஞாயிற்றுக்கிழமை 10 மணிக்குச் சமூகந்தந்து விபரங்களைப் பதிவு செய்யுமாறு இலங்கை ஆசிரியர் சங்க யாழ்.மாவட்டக் கிளைச் செயலாளர் அ.பாலச்சந்திரன் கேட்டுள்ளார்.

### சேவா லங்கா உதவி

(மீசாலை)

தென்மராட்சியில் 13 கிராம சேவகர் பிரிவிலுள்ள குடும்பங்களுக்கு தமது உதவித் திட்டங்களை வழங்கியுள்ளதாக "சேவா லங்கா அமைப்பு" அதிகாரி தெரிவித்தார்.

மேலும் 3,200 குடும்பங்களுக்கு உணவுப் பொருட்களும், 2,500 குடும்பங்களுக்கு பழமரக்கன்றுகளும், 700 குடும்பங்களுக்கு தெளிகருவிகளும் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவித்தார். (25)

### வல்லிபுரம் பகுதியில் சடலம் மீட்பு

(வடமராட்சி கிழக்கு)

வல்லிபுரக் கோவிலுக்குச் செல்லும் வீதியில் ஆனைவிழுந்தான் சந்திக்கும் வல்லிபுரக்கோவிலுக்கும் இடையில், அரசடியில் - 45 வயது மதிக்கத்தக்க ஆணின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. இச் சடலம் மந்திகை அரசினர் வைத்தியசாலைச் சவச்சாலையில் அடையாளம் காண்பதற்காக வைக்கப்பட்டுள்ளது. (17)

### கரணவாயில் குடி நீருக்குத் தட்டுப்பாடு

(கரணவாய்)

கரணவாய் தெற்கு செல்வபுரம் கிராமத்தில் கடும்மழை காரணமாக அப்பகுதிக் கிணறுகளுக்குள் அசுத்தநீர் உட்புகுந்ததால் மக்கள் அதனைப் பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் இப்பகுதி மக்கள் குடிநீர்த் தட்டுப்பாட்டை எதிர்நோக்கியுள்ளனர்.

இதன் காரணமாக பவுஸர் மூலம் குடிநீரைப் பெற்றுத்தரும்படி அப்பகுதி மக்கள் இளங்கோ சனசமூக நிலையத்தின் ஊடாக, வடமராட்சி தெற்கு - மேற்கு பிரதேச சபைச் செயலரைக் கடிதமூலம் கேட்டுள்ளனர். (8)

### கரவெட்டியில் புனர்வாழ்வு நல்லிணக்கக் குழு

(கரவெட்டி)

கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவில், பிரதேச நிவாரண புனர்வாழ்வு நல்லிணக்கக்குழுவொன்று அண்மையில் ஏற்படுத்தப்பட்டது.

பிரதேச செயலரைத் தலைவராகக் கொண்டு செயலாளர், உப செயலாளர், பொருளாளர் உட்பட பதினைந்து பேர் இக்குழுவில் அங்கத்துவம் பெற்றுள்ளனர்.

இனிவரும் காலங்களில் கிராம அலுவலகர் பிரிவுகளில் உள்ளவர்களின், நிவாரணம் பெறத் தகுதியான விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்து, அரசாங்க அதிபருக்கு இக்குழுவினரே சிபார்சு செய்து அனுப்பி வைப்பர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (13)

# ஈரானிலும் அணு ஆயுதம்; சோதனையிட அமெ.தீவிரம்!

(தெஹ்ரான்)

அணு ஆயுதங்களை உற்பத்தி செய்வதாகக் கருதப்படும் ஈரானின் இரு அணு நிலைகளைப் பார்வையிட ஐ.நா.கண்காணிப்பாளர்கள் செல்லவுள்ளனர்.

மத்திய ஈரானில் உள்ள நட்டானஸ் மற்றும் ஆரகப் பகுதிஅணு நிலையங்களுக்கு பெப்ரவரியில் சர்வதேச அணுசக்தி நிறுவனத்தின் குழு ஒன்று விஜயம் செய்யவுள்ளது.

தாம் பரிசோதனை செய்யும் வரையில் இந்நிலையங்கள் எதற்காகச் செயற்படுகின்றன என்பது பற்றித் தெளிவாகக் கூறமுடியாது என, இந்நிறுவனப் பேச்சாளர் தெரிவித்தார். முன்னதாக ஈரான் - அணு ஆயுதங்களை இரகசியமாக உற்பத்தி செய்வதாக, அமெரிக்கா வெளியிட்ட குற்றச்சாட்டுக்கு ஈரான் அரசு மறுப்புத் தெரிவித்திருந்தது. இராணுவரீதியான எந்த அணுவாயுத உற்பத்தித் திட்டமும் தம்மிடம் இல்லை என்றும், தம்மிடம் மறைப்பதற்கு எதுவும் இல்லை என்றும் ஈரான் தெரிவித்துள்ளது.

எனினும்- தமது செய்மதிப்படங்களில் ஈரானின் அணு ஆயுத உறபத்திக்கான சான்றுகள் சிக்கியுள்ளதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது. இதேவேளை, ரஷ்யாவின் உதவியுடன் ஈரான் மற்றுமோர் அணு ஆலையை பூஸார் நகரில் உருவாக்கத் திட்டமிட்டுள்ளது.

## செப்டம்பர் 11 தாக்குதல்

# விசாரணைக் குழுவிலிருந்து ஹென்றி கீஸிங்கர் ராஜினாமா

2001ஆம் ஆண்டு செப்டம்பர் 11 ஆம் திகதி அமெரிக்கா மீது நடத்தப்பட்ட தாக்குதலைத் தவிர்க்க அமெரிக்க அரசு எவ்வாறு தவறியது என, ஆராயும் பொருட்டு அமைக்கப்பட்ட விசாரணைக் குழுவின் தலைவர் - முன்னாள் அமெரிக்க வெளியுறவுச் செயலர்- ஹென்றி கீஸிங்கர் தனது பதவியை ராஜினாமாச் செய்துள்ளார்.

உள்ளக மோதல்கள், கருத்து வேறுபாடுகளே இவரது ராஜினாமாவுக்குக் காரணம் எனக் கூறப்படுகிறது. 'இது எனக்கு கவலை தரும் விடயம்தான். எனினும், இனியாவது பிரச்சினைகள் இன்றி விசாரணைகள் தொடரும் என நான் நம்புகிறேன்' என கீஸிங்கர் தெரிவித் தா.

வியட்நாம் போரில் தொன் கணக்கில் அங்கு குண்டுகள் வீசக் காரணமாக இருந்த போர் குற்றவாளியான கீஸிங்கர், எவ்வாறு அமெரிக்காவில் நடந்த விமானம் மூலமான தாக்குதலை விசாரிக்க முடியும் எனப் பல குற்றச்சாட்டுக்கள் அண்மைக்காலமாக அமெரிக்காவில் எழுப்பப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.



ஹென்றி கீஸிங்கருடன் ஜனாதிபதி புஷ்

# பிரெஞ்சுப் படைகளை எதிர்ப்பதற்கு ஐவரிக்கோஸ்ட் போராளிகள் தயார்

ஐவரிகோஸ்ட்டில் உள்ள பிரதான போராளிக் குழுவினர், அங்கு அமைதி காக்கும் பணியில் ஈடுபட்டுள்ள பிரெஞ்சுப் படைகளை எதிர்த்துப் போராடத் தயார் என அறிவித்துள்ளனர்.

எம்.பி.சி.ஐ. போராளிக் குழுவின் பேச்சாளர் சோரோ, இது பற்றிக் கருத்துத் தெரிவிக்கையில், பிரெஞ்சுப் படைகள் மேலதிகமாக ஐவரிகோஸ்ட வந்திறங்குவது, அப்படைகள் அமைதிகாப்புப் பணியிலிருந்து ஆக்கிரமிப்பு படையாக மாறுவதையே காட்டுகிறது என்கிறார்.

ஐவரிகோஸ்ட்டின் வட பகுதியில் அநேக இடங்களைத் தனது கட்டுப்பாட்டில் கொண்டிருக்கும் இந்த அமைப்பிற்கும், ஐவரிகோஸ்ட் அரச துருப்புக்களுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள யுத்தநிறுத்தத்தை கண்காணிக்க இதுவரை 1,200 பிரெஞ்சுப் படைகள் அங்கு நிலை கொண்டிருந்தன.

தற்போது பிரெஞ்சுப் படைகளின் தொகையை அதிகரிக்கும் முகமாக மேலதிக படைகள் அங்கு போய்ச்சேர்ந்துள்ளன.

## வாழ்க வளமுடன்

நமது ஈழநாட்டின் பிறந்தநாள் வாழ்த்துக்கள்

ஆறாவது அகவையில் HAPPY BIRTHDAY



பெயர் : சி.அஜீத்

முகவரி : இராவளை வீதி, வியாபாரி மூலை, பருத்தித்துறை.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

### வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------

முகவரி:------------------------------

பிறந்த ஆண்டு:------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

------------------------------

பெற்றார் ஒப்பம்


# STUDY IN INDIA

## Admission Notice - Year 2003

### Garden City College affiliated to UNIVERSITY of BANGALORE

| COURSES | DURATION | G.C.E. (A/L) PASSES NEEDED |
|---|---|---|
| B.Sc. (Computer Science) | 3 Year | Maths, Physics & Statistics |
| B.Sc. (Fashion & Apparel Design) | 3 Year | Pass in All Subjects in any discipline |
| B.Sc. (Microbiology) | 3 Year | Chemistry and Biology |
| B.Sc. (Genetics) | 3 Year | Chemistry, Physics, Biology, Zoology, Botany |
| B.Sc. (Biotechnology) | 3 Year | Chemistry, Physics, Biology |
| BCA. (Bachelor of Computer Applicants) | 3 Year | Pass in All Subjects in any discipline |
| BBM. (Bachelor of Business Management) | 3 Year | Pass in All Subjects in any discipline |
| BHM. (Bachelor of Hotel Management) | 4 Year | Pass in All Subjects in any discipline |
| B.A. (Journalism) | 3 Year | Pass in All Subjects in any discipline |
| B.Com (Computers) | 3 Year | Pass in All Subjects in any discipline |

### MUTHAYAMMAL College of Arts& Science affiliated to PERIYAR UNIVERSITY (Salem)

| COURSES | DURATION | G.C.E. (A/L) PASSES NEEDED |
|---|---|---|
| B.Sc. Biocemistry | 3 Year | Pass in All Subjects with Bio combination |
| B.Sc. Biotechnology | 3 Year | Pass in All Subjects with Bio combination |
| B.Sc.Physics | 3 Year | Pass in All Subjects with Bio combination |
| B.Sc.Microbiology | 3 Year | Pass in All Subjects with Bio combination |
| B.Com. | 3 Year | Pass in All Subjects in any discipline |
| B.Cs | 3 Year | Pass in All Subjects in any discipline |
| B.B.A. | 3 Year | Pass in All Subjects in any discipline |
| B.C.A. | 3 Year | Pass in All Subjects in any discipline |

### SSM College of Engineering affiliated to ANNA UNIVERSITY ( Channai)

| COURSES | DURATION | G.C.E. (A/L) PASSES NEEDED |
|---|---|---|
| B.E. Information Technology | 4 Year | Pass in All Subjects with Maths & Physics |
| B.E. Computer Science and Engineering | 4 Year | Pass in All Subjects with Maths & Physics |
| B.E. Electronics and Communication Engineering | 4 Year | Pass in All Subjects with Maths & Physics |
| B.E. Mechanical Engineering | 4 Year | Pass in All Subjects with Maths & Physics |
| B.Sc. Information Technology | 3 Year | Pass in All Subjects with Maths & Physics |
| B.Sc. Computer Technology | 3 Year | Pass in All Subjects with Maths & Physics |
| B.Sc. Apparel and Fashion Technology | 3 Year | Pass in All Subjects with Maths & Physics |
| M.S.C. Information Technology | 5 Year | Pass in All Subjects in any discipline |

### நீங்கள் O/L முடித்துவிட்டீர்களா???

இந்தியாவில் Diploma (3வருடம்) பயிற்சி நெறியில் சேர்ந்து, பின் ANNA UNIVERSITY (மேலும் 2 வருடம்) பயின்று பட்டதாரியாக (Graduate/ Degree Holder) வாய்ப்பு.

3 Years Diploma in

- CIVIL ENGINEERING
- MECHANICAL ENGINEERING
- ELECTRICAL & ELECTRONICS
- COMPUTER TECHNOLOGY
- ELECTRONICS & COMMUNICATION
- AUTOMOBILE
- INFORMATION TECHNOLOGY
- ELECTRONICS & INSTRUMENTATION*

MUTHAYAMMAL POLYTECHNIC

Rasipuram - 637 408, Namakkal Dt, T.N, India

◈ Separate Hostel for Boys & Girls and with all Meals ◈ All necessary VISA formalities will be handled by the College

SCHOLARS INFORMATION CENTER
2nd Floor, 'Colombo Plaza', 50 Galle Road, Colombo-06.
Tel: 072-984297
074-512468

விளையாட்டு அரங்கம்

# இங்கிலாந்துக்கும் ஒரு காலம் வரும்!



நசார் உசேன்

ஆஷஸ் தொடரில் மூன்று ஆட்டங்கள் நிறைவடைந்துவிட்டன. மூன்றிலும் இங்கிலாந்து படுதோல்வி. கிறிஸ்மஸ் மற்றும் வருடப்பிறப்பை அண்டி, ஏனைய இரண்டு டெஸ்ட் போட்டிகளும் நடைபெறவுள்ளன. அதற்கிடையில், முதற்கட்ட முக்கோணக் கிரிக்கெட் தொடர், ஒரு நாள் போட்டிகளைத் தொடர்ந்து வரப்போகும் - இரண்டு டெஸ்ட் போட்டிகளிலும் 'முடிவில்' ஏதாவது மாற்றம் இருக்குமா? அல்லது இங்கிலாந்துக்கு முடிவாக இருக்குமா? இரண்டாவதாகத்தான் இருக்கும் என்று ஏதிர்வு கூறுகிறார்கள், கிரிக்கெட் ஆய்வாளர்கள்.

இது ஒருபுறமிருக்க, இங்கிலாந்து வேல்ஸ் கிரிக்கெட் சபையின் தலைவர் டேவிட் மோர்கன் - ஒரு காத்திரமான விசாரணைக்கு உத்தரவிடப்படும் என்று அறிவித்திருக்கின்றார். இன்னும் இரண்டு டெஸ்ட் போட்டிகள் மீதமிருக்கும்போதே விசாரணை என்பது, ஆஷஸ் தோல்வி எந்தளவு இங்கிலாந்தைப் பாதித்திருக்கிறது என்பதை எடுத்துக்காட்டுகிறது. இந்த விசாரணைக்கு பல்வேறு தரப்பினரும் உள்ளாக்கப்படுவார்கள். இது வர்த்தக நிறுவனமொன்றின் விற்பனைத் திறனை எவ்வாறு அதிகரிக்கிறது என்று ஆய்வு நடத்துவது போன்றதாகும்.

இருந்தும் அநேகமான வீரர்களுக்கு ஏற்பட்டிருந்த காயங்கள்தான், தோல்விகளுக்கு ஒரு முக்கிய காரணம், என்பதை ஏற்றுக் கொள்ளும் அவர் - இந்தத் தோல்விகளால் அணித் தலைவரின் பதவிக்கு எதுவித ஆபத்தும் இல்லை என்றும் கூறுகிறார். உலகின் மிகப் பலம்வாய்ந்த அணியொன்றுடன் மோதிய, பலம்குறைந்த இங்கிலாந்து அணியை, வழிநடாத்திய அவரின் பணி மிகக் கடுமையானது என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்கிறார்.

இதேவேளை, இங்கிலாந்தின் தோல்விகள் பற்றி, அணித் தலைவர் நசார் உசேன் மிக ஆழமான கருத்துக்களைக் கூறுகின்றார். 'கவுன்ரி அணிகளில் இருந்தே இங்கிலாந்து அணிக்கு வீரர்கள் உள்வாங்கப்படுகிறார்கள். ஆனால், உண்மையான பிரச்சினையை அவர்களின் மேல் சுமத்திவிடமுடியாது. ஏனெனில், அதற்கப்பாலும் தோல்விக்கான காரணங்கள் நீண்டு செல்கின்றன' என்கின்றார் அவர். 'மிகப் பலமான அவுஸ்திரேலிய அணியை எவ்வாறு எதிர்கொள்ளப் போகிறீர்கள் என்று கேட்கும் இங்கிலாந்து மக்கள், எமது சமூகத்தில், வாழ்க்கை முறையில் கிரிக்கெட்டின் பங்கு என்ன என்பதையும் சிந்திக்க வேண்டும். நாங்கள் தாயகத்தில் எவ்வாறான பந்து வீச்சாளர்களை உருவாக்குகின்றோம். எத்தகைய ஆடுகளங்களை உருவாக்கின்றோம் என்பதெல்லாம் மிக முக்கியம். பேர்த் ஆடுகளம் அற்புதமானது. இதைப் போன்ற களங்களில் விளையாடுவது உண்மையான திறனை வளர்ப்பதற்கு உதவும்' - என்கிறார் உசேன். இறுதியாகக் கூறும்போது, 'நாங்கள் நல்லதொரு அணியைப் படிப்படியாக வளர்த்து வந்தோம். ஆனால், கடந்த இரண்டு மாத காலத்தில் அவுஸ்திரேலிய அற்புத அணி எல்லாவற்றையும் அள்ளிக்கொண்டுபோய் விட்டது' என்று அங்கலாய்க்கின்றார்.

ஸ்ரீவ் வோ, இங்கிலாந்தின் கென்ட் அணிக்காக விளையாடியவர். அவர் கூறுகிறார் - 'இங்கிலாந்து அணியில் சிறந்த பல வீரர்கள் இருக்கிறார்கள். வீரர்களை வளர்த்தெடுப்பதில் கவுன்ரிகளைக் குறை சொல்வதில் அர்த்தம் இல்லை' என்கின்றார், 'செய்ய வேண்டியது என்னவெனில் - டெஸ்ட் ஆட்டத்திற்கு உகந்த வீரர்கள் அனைவரையும் ஒழுங்கமைத்து ஒன்றிணைப்பதாகும்' என்கிறார் ஸ்ரீவ் வோ.



ஸ்ரீவ் வோ

இன்னொருபுறம் THE GUARDIAN பத்திரிகை, இங்கிலாந்தின் தோல்விக்கான ஐந்து காரணங்களைப் பட்டியலிட்டுக் காட்டியிருக்கின்றது.

முதலாவது டெஸ்ட் போட்டியில் - பிரிஸ்பேனில் பூவா தலையா வென்ற உசேன்தான் முதலில் துடுப்பெடுத்தாடாமல், அவுஸ்திரேலியாவிற்கு சந்தர்ப்பத்தைக் கொடுத்தது. இதனால், அவுஸ்திரேலியா 2 விக்கெட் இழப்பிற்கு 364 ரன்களும் குவித்து, அப்பால் விளையாடி 384 ரன்களால் வெற்றியீட்டியது.

இரண்டாவது காரணம் - அணி வீரர்களில் காயம்பட்டவர்களின் பட்டியல், இது மிக நீளமானது. (GUARDIAN - வீரர்களின் பெயர்களைப் பட்டியலிட்டுள்ளது).

மூன்றாவது காரணம் - அடிலெய்ட் டெஸ்டில் மைக்கல் வோன் அவுட்டாகியது. மைக்கல் வோனின் 177 ஓட்டங்களுடன் 3 விக்கெட் இழப்பிற்கு 295 ரன்களுடன் பலமான நிலையில் இங்கிலாந்து இருந்தது. ஆனால், அன்றையதினம், இறுதி ஓவரில் மூன்றாவது பந்தில், வோன் - களைத்த நிலையில் ஒரு கட்சைக் கொடுத்தார். அவர் மட்டும் அவுட்டாகாமல் இருந்திருந்தால், அடுத்தடுத்த நாட்களில் என்ன மாதிரி ஆட்டத்தின் போக்கு இருந் திருக்கும். யார் கண்டது...? என்று வினாவை எழுப்புகிறது GUARDIAN.

அவுஸ்திரேலிய பத்திரிகைகளின் குறிப்புகள் மைதானத்தில் பெரிய திரைகளில் காட்டப்பட்டமை. இவை, இங்கிலாந்தின் பலவீனத்தைச் சுட்டிநின்றமை, இங்கிலாந்து அணிக்கு உளவியல் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கும் - இது நான்காவது.

ஐந்தாவது காரணம் - குயீன்ஸ்லாந்து அணியின் தலைவர் ஜிம்மி மஹேரார். குயீன்ஸ்லாந்துக்கு எதிரான இங்கிலாந்து ஆட்டத்தில், மூன்று நாட்களில் இரண்டு நாட்களை குயீன்ஸ்லாந்தே துடுப்பாட்டத்தில் பயன்படுத்திக்கொண்டது. இதனால், இங்கிலாந்து - முதல் டெஸ்டுக்கு மிக அண்மித்த பயிற்சிச் சந்தர்ப்பத்தை இழந்துவிட்டது. அதோடு, பந்துவீச்சாளர்களையும் களைக்கப் பண்ணிவிட்டார் ஜிம்மி மஹேரார். தொடர்ந்து இரண்டு வாரங்களின் பின் அவுஸ்திரேலிய 'A' அணிக்குத் தலைமை தாங்கிய அவர், பந்துவீச்சாளருக்குச் சந்தர்ப்பம் கொடுக்காமல், மீண்டும் இங்கிலாந்தையே துடுப்பாடச் செய்தார். இந்த இரண்டு சந்தர்ப்பங்களும் திறமையான திட்டமிடல்களாக இருந்தமை இங்கிலாந்துக்குப் பாதகமாக முடிந்தது என்கிறது GUARDIAN.

இன்னும் இரண்டு டெஸ்ட் போட்டிகள் மற்றும் இலங்கையும் கலந்துகொள்ளும் முக்கோண ஒருநாள் போட்டி காத்திருக்கின்றன. இங்கிலாந்து அணி எத்தனை விமர்சகரின் விமர்சனங்களுக்கு முகம் கொடுக்க வேண்டுமோ. பாவம் உசேனும அவரது அணியும்.

– நிர்மலன் –

# ஆசியக் கண்டத்துக்கும் ஒரு ஆசை

ஆசிய உதைப்பந்தாட்டச் சம்மேளனம் மிக நம்பிக்கையோடு பேசுகின்றது. இதற்குக் காரணம், அவர்கள் தொடர்ச்சியாக அழுத்தம் கொடுத்துவந்த ஒரு விடயத்தை, வற்புறுத்திக் கேட்கும் அளவிற்கு ஆசிய உதைப்பந்தாட்ட அணிகளின் வளர்ச்சி ஒருமுகமாகக் காணப்படுவதாகும். இதனால்தான், 2006 ஆம் ஆண்டில் உலகக் கிண்ண உதைப்பந்தாட்டப் போட்டிகள் நடைபெறும் போது, ஆசிய நாடுகளுக்கு, சென்றமுறையைவிட ஒரு இடம் கூடுதலாக ஐந்து இடங்கள் கட்டாயம் கிடைக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள்.

2004 ஆம் ஆண்டில் சீனாவில் நடைபெறவிருக்கும் ஆசியக் கோப்பை உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி தொடர்பான ஆரம்ப மற்றும் தகுதிகாண் நிலைகளுக்கு, நாடுகளைத் தெரியும் குலுக்கல் நிகழ்வில் கலந்துகொண்டபோது, ஆசிய உதைப்பந்தாட்டச் சம்மேளன உபதலைவர் அஸாட்டாக்கி இந்தக் கருத்தினை வலியுறுத்தியதோடு - இது, நிச்சயம் நடைபெறுமென்றும், 2002 ஆம் ஆண்டின் உலகக் கிண்ண உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் பின் இந்த எதிர்பார்ப்பு கூடுதலாக வலுப்பெற்றிருப்பதாகவும் கூறுகின்றார்.

ஆசியக் கண்டத்துக்கு இன்னொரு அங்கத்துவம் - அதாவது, ஐந்து நாடுகளின் பங்கேற்பு நியாயபூர்வமானது என்ற கருத்துக்கு ஆதாரமாக - 2002 ஆம் ஆண்டு உலகக் கிண்ண உதைப்பந்தாட்டப் போட்டிகளில், உலகக்கிண்ண வரலாற்றில் முதன் முதலாக ஒரு ஆசிய நாடு, அதாவது - தென்கொரியா அரை இறுதி ஆட்டம்வரை முன்னேறியது, மற்றும், இறுதிப் பதினாறு அணிகளுக்குள் ஒன்றாக ஜப்பான் வந்தது. இரண்டுமே சுட்டிக்காட்டப்படுகின்றன. ஆசிய நாடுகளுக்கும் கூடுதலாக ஒரு இடம் ஒதுக்கப்படுவதை எதிர்பார்ப்பவர்கள், ஆசிய நாடுகள்-தம் திறமையின் அடிப்படையிலேயே உலகக் கிண்ணப் போட்டிகளில் அங்கத்துவம் பெற வேண்டும் என்று கூறுகையில், அந்தச் சந்தர்ப்பம் இப்போது வந்துவிட்டது என்கிறார்கள், ஆசிய உதைப்பந்தாட்டச் சம்மேளத்தினர்.



ஜப்பானிய வீரர்கள் அக்கிரா, நக்காயாமா

இது தொடர்பில் மேலும் கருத்துத் தெரிவித்த ஆசிய உதைப்பந்தாட்டச் சம்மேளத்தின் பொதுச் செயலாளர் பீற்றர் வேலப்பன் - சீன நாட்டின் உதைப்பந்தாட்டம் பற்றியும் எடுத்துக் கூறுகிறார். சீனாவில் நடைபெறும் எந்த நிகழ்வும் மிகத் திறம்பட ஒழுங்கமைக்கப்பட்டுக் காணப்படுவது வழக்கம். இதேபோல 2003 இன் பெண்கள் உதைப்பந்தாட்ட உலகக் கிண்ணப் போட்டிகள், 2004 இல் நடைபெறவுள்ள ஆசியக் கிண்ண உதைப்பந்தாட்டப் போட்டிகள், 2008 இல் பீக்கிங் ஒலிம்பிக் எல்லாமே உயர் நிலையில்தான் இருக்கும் என்கிறார். 2004 இல் ஆசியக்கிண்ணப் போட்டிகளை எவ்வாறு திறம்பட ஒழுங்கமைக்கிறார்களோ, அதேவேளை, அவர்களே ஆசியக் கிண்ணத்தையும் வெல்லும் அளவிற்குத் திறமையான சீன அணியொன்றைக் கட்டியெழுப்ப வேண்டும் என்கிறார் பீற்றர் வேலப்பன். எல்லா மட்டங்களிலும் உயர் திறமை பெற்ற உதைபந்தாட்ட வீரர்களை உருவாக்க வேண்டும். இதற்காக ஐரோப்பிய உதைப்பந்தாட்டக் களத்தில் எல்லா மட்டத்திலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகளிலும் அங்குள்ள அணிகளின் அணிவீரர்களாகப் பங்குகொள்ள வேண்டும். இது, ஆசிய விளையாட்டு வீரர்கள் எல்லோருக்கும் பொருந்தும். ஆனால், இது அரசுகளால்தான் பொறுப்பேற்றுச் செய்யக்கூடிய காரியமாக இருக்கும். இந்த வகையில் உலகின் அதிகூடிய சனத்தொகை கொண்ட நாடும், அதேபோல கண்டங்களிலேயே அதிகூடிய சனத்தொகையைக் கொண்ட ஆசியாவும், உதைபந்தாட்டத் துறையில் மென்மேலும் தீவிரமும் திறமையும் காட்டவேண்டும். அது, நியாயமானது என்பது போலவே நிர்வாகிகள் கருத்து வெளியிடுகிறார்கள். இத்தோடு சேர்த்துத் தொடர்ச்சியாக உதைபந்தாட்டம் விளையாடும் நாடுகளுடன், யுத்தத்தால் சீரழிந்துபோயுள்ள ஆப்கானிஸ்தான் நாடும் மற்றும் புதிதாகச் சுதந்திரம் பெற்ற கிழக்குத் தீமோர் நாடும் ஆசியக் கிண்ணப் போட்டிகளில் பங்குகொள்ளவேண்டும் என்று சகலதரப்பினரும் விருப்பம் தெரிவித்துள்ளார்கள். ஆப்கானிஸ்தான் பற்றி வேலப்பன் கருத்துக்கூறும்போது - யுத்தத்தின் காரணமாக உட்கட்டுமான அமைப்பெல்லாம் சிதைவடைந்துள்ள ஆப்கானிஸ்தானில், உதைப்பந்தாட்டத் துறையை வளர்த்தெடுக்க ஆசிய உதைபந்தாட்டச் சம்மேளனம் சகல உதவிகளையும் செய்யும் என்று கூறியுள்ளார். சம்மேளனச் செயலர் வேலப்பன் - ஐரோப்பாவிற்கும், தென்அமெரிக்காவிற்கும் மட்டுப்படுத்தப்பட்டதாக அல்லது அதீத திறமைகள், நுட்பங்கள் போன்றவற்றால் நியாயபூர்வமாகவே அவர்களிடம் கையாளப்பட்டுள்ள உதைப்பந்தாட்டத்தின் சரியான பங்கினை ஆசியாவும் பெறவேண்டும். அதற்கான முயற்சிகள் நீண்டகாலமாகவே நடைபெற்று வருகின்றன என்றாலும், தென்அமெரிக்காவின் அநேகமாக எல்லா நாடுகளும், அதேபோல ஐரோப்பாவின் எல்லா நாடுகளும் - சர்வதேசத்தரம் பெற்றிருக்கும் அதேவேளையில் - ஆசியாவின் குறிப்பிட்ட ஒரு சில நாடுகள் தவிர, ஏனைய நாடுகளில் சர்வதேச தரத்திற்கு தம்மை உயர்த்திக்கொள்ள எவ்வளவு காலம் செல்லும். விடை தெரியாத வினாவாகத்தான் இது காத்திருக்க வேண்டியிருக்கும்.



மீண்டும் வலுப்பெறுமா தென்கொரியா



ஆசியாவிலும் உண்டு - அசகாய சூரர்கள்.

– நிமலா –

Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports

# றொமேஷ் நொட் அவுட்

– பிரகாசன் –



தென்னாபிரிக்கச் சுற்றுப்பயணம் செய்து, தோல்விகளைச் சந்தித்து திரும்பியிருக்கிறது இலங்கை அணி. இந்த அணித்தெரிவின்போதே அதிருப்திக் குரல்கள் எழுந்ததுடன், அது விளையாட்டுத்துறை அமைச்சர் வரை சென்றது என்றாலும் - ஒரு சிறு மாற்றத்துடன் தென்னாபிரிக்கா சென்றதும், அங்கிருந்து வெறுங்கையோடு இலங்கை திரும்பியதும் இன்னம் ஈரம் காயாத செய்திகள்.


எனவே, இந்த வகையில் இலங்கைத் தெரிவுக்குழு பல்வேறு தரப்பினதும், வினாக்களுக்கு விடை இறுத்தே ஆகவேண்டிய நிலை. இது ஒருபுறம் இருக்க, எதிர்வரும் பெப்ரவரியில் நடைபெறவுள்ள உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகளுக்கு, அணித் தெரிவுக்கென தேர்ந்தெடுக்கப்பட்ட 30 பேரில், றொமேஷ் களுவிதாரணவின் பெயர் இருக்கவில்லை. கிரிக்கெட் வட்டாரங்கள் மற்றும் ரசிகர்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியை எழுப்பிய விடயமாக, பரபரப்பாக இது பேசப்பட்டது. உண்மையிலேயே 30 பேரில் ஒருவராகக்கூடத் தெரிவுசெய்யப்பட தகாதவராவதற்கு றொமேஷ் களுவிதாரண கிரிக்கெட்டுக்கு அப்படியேதும் பாவம் புரியவில்லை. ஆனால, எதிர்மறையாக அதிரடி வீரனாக, சிறந்த ஆரம்பத் துடுப்பாட்ட வீரனாக, அட்டகாசமான விக்கெட் காப்பாளராகத் தன்னை நிரூபித்தவர். இதற்கு அவர் தொடர்பான கிரிக்கெட் தரவுகளே சான்று.

இருந்தும், றொமேஷ் களுவிதாரண மனம் சோர்ந்து போய்விடவில்லை - 'நான் என்னை நிரூபிப்பேன். எனது திறமை மூலம் மீண்டும் அணிக்குள் இடம்பிடிப்பேன். என்னுள் இன்னும் நிறையக் கிரிக்கெட் இருக்கிறது' என்றவர், கழகக் கிரிக்கெட்டில் சுடச்சுட எல்லோருக்கும் சாதித்துக் காட்டிவிட்டார். உள்ளூர்க் கழக ஒருநாள் போட்டிகளில் அவரது ஓட்ட எண்ணிக்கைகள் 78 பந்துகளில் 64 ஓட்டங்கள், 43 பந்துகளில் 44 ஓட்டங்கள், 58 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 52 ஓட்டங்கள், 43 பந்துகளில் 32 ஓட்டங்கள், 105 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 98 ஓட்டங்கள், 83 பந்துகளில் 99 என்று - சராசரி 97.2 என்ற உயர் நிலையில் நிற்கின்றார். இதற்குத் தெரிவாளர்கள் என்ன பதில் கூறப்போகிறார்கள் என்று யோசிக்கும் வேளையில், தன் திறமை, அதிர்ஷ்டம் இரண்டும் சரியாகச் சமமாகச் செயற்பட, அநேகமாக மீண்டும் அவர் அணிக்குள் நுழைவார் என்றே எண்ணத் தோன்றுகின்றது.

அவுஸ்திரேலியாவில் நடைபெறும் முக்கோண ஒருநாள் போட்டிகளில், ஆரம்பப் போட்டிகளின்போது - அரவிந்த டீ சில்வா பங்குகொள்ள இயலாது இருக்கிறார் என்று அறிவிக்கவே, அந்த இடத்திற்கு றொமேஷ் களுவிதாரண அழைக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அப்படியாயின், அரவிந்த டீ சில்வா இல்லாத பட்சத்தில் முப்பது பேரில் இருந்து ஒருவரை அனுப்பாமல், றொமேஷ் களுவிதாரணவை அனுப்புவது ஏன்? அவரின் திறமை அரவிந்தவின் திறமைக்குக் குறைந்ததல்ல என்பதால்தானே, அப்படியாயின் - அத்தகைய ஒருவர், 30 பேர் கொண்ட அணிக்குள் சேர்க்கப்படாதது ஏன்? இப்படியாகப் பலபல வினாக்கள்.


ஆனால், றொமேஷ் களுவிதாரண யாரிடமும் யாசகம் செய்து இடம்பிடிக்கும் வீரரல்ல. தன் திறமையைக் கொண்டே இடம்பிடிப்பவர் அவர். 1992 இல் தனது முதலாவது டெஸ்டிலேயே, அவுஸ்திரேலியாவுக்கு எதிராக 132 ஓட்டங்கள் பெற்றவர். இதற்குப் பின் 3 வருடங்கள் ஓரங்கட்டப்பட்டுப் பின்னர், வலியவே அணிக்குள் அழைக்கப்பட்டவர். இக்காலகட்டத்தில் (1996) உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் - இலங்கையின் சாதனைக்கு றொமேஷின் பங்களிப்பு என்ன என்பதைச் சகலரும் அறிவார்கள். இந்நிலையில் றொமேஷ் களுவிதாரண ஓரங்கட்டப்பட்டிருப்பது என்பது ஒரு புத்திசாதுரியமான காரியமாகத் தெரியவில்லை என்றாலும், நல்லதொரு வாய்ப்பும், தனது திறமையும் இலங்கை அணிக்குள் றொமேஷ் களுவிதாரண மீண்டும் நுழைவதை உறுதிசெய்திருப்பதும் ரசிகர்கள் எல்லோருக்குமே மகிழ்ச்சிகரமானதாகவே இருக்கும்.

# கிரிக்கெட் வீரர்கள் சுவையான செய்திகள்



ஷேவாக்

சர்வதேச கிரிக்கெட் விளையாடும் நாடுகள் எல்லாம் சிறிது காலமாக நிரம்பவே பிஸி. ஆஷஸ் தொடருக்காக அவுஸ்திரேலியாவில் சுற்றுப் பயணம் செய்யும் இங்கிலாந்து அணி, மூன்று டெஸ்ட் ஆட்டங்கள் முடிவடைந்த நிலையில் - அடுத்த இரு டெஸ்ட் போட்டிகளும் ஜனவரியில் நடைபெறவிருக்க, இடைப்பட்ட காலத்தில் முக்கோண ஒருநாள் போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ளது. இதில் கலந்து கொள்ளும் மூன்றாவது அணி இலங்கை. இலங்கை அணி தற்போது தென்னாபிரிக்காவில் இரண்டு டெஸ்ட் மற்றும் ஐந்து ஒருநாள் போட்டிகளில் கலந்துகொண்டுள்ளது. இது நிறைவடைய, இலங்கை - அவுஸ்திரேலியா செல்லும். மறுபுறம் - பாகிஸ்தான், சிம்பாப்வே நாட்டில் டெஸ்ட் மற்றும் ஒரு நாள் போட்டிகளில் புதியதொரு வீரியத்துடன் பங்கு கொண்டுள்ளது. அதனைத் தொடர்ந்து தென்னாபிரிக்காவில் சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ள - மேற்கிந்தியத் தீவுகள் அணி, இந்தியாவுடன் டெஸ்ட் போட்டிகளில் தோற்றாலும் ஒருநாள் ஆட்டங்களில் இந்தியாவிற்கு அதிர்ச்சி வைத்தியம் அளித்துவிட்டு வங்காள தேசத்தில் ஆடிக் கொண்டிருக்கிறது. அங்கு வெற்றிகள் மேற்கிந்திய அணிக்கு அவ்வளவு கடினமல்ல என்ற நிலை. இந்தியா தற்போது நியூசிலாந்து சென்றிருக்கின்றது.



ஹர்பஜன்

இந்நிலையில் கிரிக்கெட் தொடர்பில் பல சுவையான தகவல்கள் வருவதுடன் சம்பவங்களும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. நியூசிலாந்தில் போய் இறங்கிய இந்திய அணியின் வீரேந்தர் சேவாக்கும், ஹர்பஜன் சிங்கும் தூய்மையற்ற பாதணிகள் கொண்டு சென்றமைக்காக - அபராதம் விதிக்கப்பட்டிருக்கிறார்கள். உலகின் முதல்தர விவசாய நாடாகத் திகழும் நியூசிலாந்து - தனது இயற்கைவளம் விவசாய உற்பத்திகள், மந்தை வேளாண்மை முதலியன பாரிய நோய்த்தாக்கத்துக்கு உட்படாதவாறு எடுக்கும் நடவடிக்கைகளில் விமான நிலையக் கடும் பரிசோதனைகளும் ஒன்று. இதற்கு முன்பும் அவுஸ்திரேலிய றகர் அணியொன்றும் இப்படி அபராதம் விதிக்கப் பெற்றிருக்கிறது.




பொலொக்

சிம்பாப்பேயில் சுற்றுப் பயணம் செய்த பாகிஸ்தான் அணியின் வேகப் பந்துவீச்சாளர் சொய்ப் அக்தார் - இவர் பந்தைச் சேதப்படுத்தியதாகக் குற்றம் சாட்டப்பட்டு எச்சரிக்கையுடன் விளையாட அனுமதிக்கப்பட, அடுத்தடுத்த ஆட்டங்களில் ரசிகர்களுக்குப் போத்தலால் எறிந்து அசிங்கமான சைகைகள் செய்து தற்போது தண்டம் விதிக்கப்பட்டிருக்கிறார். இதற்குச் சாட்டுக்கூறும் அணித் தலைவர் வக்கார் யூனுஸ் - 'வேகப் பந்து வீச்சாளர்களுக்கு கோபம் கொஞ்சம் கூடுதல்தான்' என்கிறார்.

ஆனால், வேகப் பந்துவீச்சாளர் பிரெட்லீ கோபம் கொள்ளாமலே, இங்கிலாந்து பின்வரிசை வீரர் அலெக் ஸ்ரூவட்டினைப் பந்து வீச்சின்போது சாய்த்து, கண்புருவத்துக்கு மேல் ஆறு இழைகள் போடப் பண்ணியிருக்கிறார். ஹெல்மெட் முன்காப்பினையே துளைத்திருக்கிறது பந்து. ஆனால், இது - இங்கிலாந்து அணித் தலைவர் நசார் உசேனால் நாகரிகமாக ஏற்கப்பட்டு, பிரெட்லியை வசைபாடிய இங்கிலாந்து ரசிகர்களேயே குறை கூறியுள்ளார். அவுஸ்திரேலிய வேகப் பந்துவீச்சாளர் ஜிலெஸ்பி, 'தொழில்சார் ஆட்டங்களில் அடிபடாமல் விளையாடப் பழகிக் கொள்ளவேண்டும்' என்று அறிவுரையும் கூறுகிறார்.

ஹூப்பர்



இது ஒருபுறம் இருக்க, ஆஷஸ் தொடர் முடியுமுன்னமேயே - அவுஸ்திரேலியாவில் முக்கோணக் கிரிக்கெட் தொடர் ஆரம்பிக்கப்பட முன்னமேயே, அவுஸ்திரேலிய உலகக் கிண்ண அணித் தெரிவுக்காக தெரிவு செய்யப்பட்ட முப்பது வீரர்களில் ஸ்ரீவ் வோவின் பெயர் இல்லை. ஆனால், ஸ்ரீவ்வோ கருத்துக் கூறும்போது - 'ஒரு நாள் போட்டிகளில் நான் இல்லையென்பது சரி, ஆனால் டெஸ்ட்டை விட்டு ஓய்வு பெறப்போவதில்லை . எனது ஆசை இந்தியாவில் ஒருமுறை தொடரை வெல்லவேண்டும் என்பதுதான்' என்கிறார். ஆனால், இன்னொரு சாராரோ இவர் பணத்துக்காக ஆசைப்பட்டுத்தான் தொடர்ந்தும் அணியில் இருக்க விரும்புகிறார் என்கிறார்கள். இதற்குப் பதிலளிக்கும் ஸ்ரீவ் வோ - 'பணத்துக்கு ஆசைப்பட்டால் இங்கிலாந்தின் கவுன்ரி ஒன்றில் இலகுவாக விளையாட என்னால் முடியும். அது கூடிய பணத்தையும் தரும். ஆனால், அப்படி நான் செய்யமாட்டேன்' என்கிறார். ரிக்கி பொண்டிங் தலைமை தாங்கப்போகும் அவுஸ்திரேலிய அணி, மிகப் பலமானதாக இருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால், ஸ்ரீவ் வோ போன்ற அதியுயர் ஆளுமை நிறைந்த ஒருவர் களத்தில் இல்லை என்பது ஒரு வெறுமையைக் காட்டி நிற்கும் என்பது மட்டும் உண்மை.



பொன்டிங்

ஒருபுறம் இங்கிலாந்து மூன்று டெஸ்ட் போட்டிகளிலும் தோற்று நிற்கிறது. அதன் முக்கியமான பிரச்சினை ஏறத்தாழ எல்லா வீரர்களும் காயப்பட்டிருப்பது. ஆனால், இப்போது முன்னாள் இங்கிலாந்து அணித் தலைவர் இயன் பொத்தம் கருத்துக்கூறும்போது - 'நஸார் உசேன் அணித் தலைவர் பதவியில் இருந்து நீக்கப்பட வேண்டிய காலம் வந்துவிட்டது' என்கிறார். ஆனால் மிகவும் தளர் நிலையில் இருந்த இங்கிலாந்து அணியை இந்த அளவிற்கு வளர்த்து விட்டவர் நஸார் உசேன் என்பதையும் மனங்கொள்ள வேண்டும் என்கின்றனர் கிரிக்கெட் ஆய்வாளர்கள். எனினும், காயங்கள் இன்னும் இரண்டு மாதங்களில் ஆறிப்போக, உலகக் கிண்ணப் போட்டிகளில் பங்குகொள்ளப் போகும் இங்கிலாந்து அணி வீரர்கள் சமதையான போட்டியாளர்களாகத்தான் மற்றைய அணிகளுக்கு இருக்கப் போகிறார்கள்.

உலகக்கிண்ணப் போட்டிகளின் இறுதியாட்டம் நடைபெறப்போகும் மைதானம் ஜொஹனஸ்பேர்க் வண்டரஸ் மைதானம். இலங்கையுடனான போட்டியில் பதினெட்டு ஓட்டங்களுக்கு நான்கு விக்கெட்கள் இதே மைதானத்தில் வீழ்த்தியவர் ஷோண் பொலொக். தென்னாபிரிக்க அணித் தலைவரும் கூட, இவரது கருத்தொன்று சுவையானது. 'இறுதியாட்டத்திற்கு இம் மைதானம் பொருத்தமற்றது. ஏனெனில், பந்து வீச்சாளர்களுக்கு வாய்ப்பான இம் மைதானம் துடுப்பாட்ட வீரர்களுக்குச் சாதகமற்றது. இது குறைந்த எண்ணிக்கை பெறும் ஆட்டத்துக்கே வழிவகுக்கும். இது ரசிகர்களை ஏமாற்றுவதாக முடியும்' என்கிறார்.



அக்தர்

மேற்கிந்திய அணி மீண்டும் ஒரு எண்பதுகளின் அணியாக வளர்கிறது என்ற அபிப்பிராயம் புதிதாக உருவாகி வருகின்றது. இதுவரை காலமும் அடிமேல் அடிவாங்கிய இவ்வணி இந்தச் சில மாதங்களில் தன்னை வெகுவாக நிரூபித்திருக்கிறது. சர்வான், கைல்ஸ் ஹைண்ட்ஸ், சாமுவெல், லோசன் என்று ஒரு இள மட்டம், அதி அற்புதமாக ஆடிக்கொண்டிருக்கிறார்கள். மேற்கிந்தியா, உலகக் கிண்ணப் போட்டிகளில் என்ன செய்துவிட முடியும் என்று கேட்டவர்கள், தற்போது மேற்கிந்திய அணியை ஆச்சரியமாகப் பார்ப்பதைத் தவிர்க்க இயலவில்லை.

ஷேன் பொண்ட் நியூசிலாந்து அணியின் வேகப் பந்துவீச்சாளர். மிகத் திறமைவாய்ந்த, ஆனால் - இன்னமும் பெரிதும் அறியப்படாதவர். இம்முறை டெஸ்ட் போட்டியில் இந்தியாவை மண்கவ்வச் செய்வது நிச்சயம் என்கிறார் ஷேன் பொண்ட். உலகின் ஐந்தாவது அதிவேகமான பந்தை வீசியவராக ஷேன் பொண்ட் கருதப்படுகின்றார். இவர் இங்கிலாந்தின் வோர்விக்ஷயர் கவுன்ரி அணிக்காக விளையாடி வருபவர் என்பது குறிப்பிடத்தக்கது.



சர்வான்

இந்த வகையில் அநேகமான சர்வதேச கிரிக்கெட் அணிகள் தங்கள் கிரிக்கெட் திறமையை உச்சத்துக்குக் கொண்டு செல்ல முயன்று கொண்டிருக்கின்றன. இன்னொரு புறம் அதனூடாக சுவையான சம்பவங்களும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

சிந்தனைக்கு

ஒருவனை அறிவதற்கு அளவுகோல் அவன் வார்த்தைகளே. -பீற்றர் ஹோல்

# நமது நோக்கு

## சரியான மதிப்பீடும் தவறான செயற்பாடும்

கொழும்பில் இருபிரதான கட்சிகளுக்கிடையேயும் நேற்று முன்தினம் வெளியிடப்பட்ட கருத்தும், எதிர்க் கருத்தும் - இரண்டும் வெவ்வேறு நிலைகளில் இருந் தாலும், குறிப்பிட்ட ஒரே விடயத்தை வலியுறுத் துவதாக அமைந்திருந்தது சுவாரசியமான 'அரசியற் பேச்சாக' இருந்தது.

முன்னர் வெளியுறவு அமைச்சராக மட்டுமே இரு ந்துவந்து, தற்போது - ஜனாதிபதியின் நெருங்கிய ஆலோசகராகவும், பொதுஜன ஐக்கிய முன்னணி யின் 'சமாதான எதிர்ப்பு' இயக்கத்தின் பிரதான பேச் சாளராகவும் உருவாகியிருக்கும் லக்ஷ்மன் கதிர்கா மர் -

அமைதி முயற்சிகள் பற்றிய, பொதுஜன ஐக்கிய முன்னணியின் கருத்துக்களை வெளியிடுமுகமாக, கொழும்பில் கூட்டிய செய்தியாளர் மாநாட்டில் முத லாவது கருத்து வெளியானது.

தனியே நாட்டுக்குள்ளேயான உள்ளூர் ஊடக வியலாளர்கள் மட்டுமே அழைக்கப்பட்டிருந்த இச் செய்தியாளர் மாநாட்டில் - இறுதி நேரத்தில், இது பற்றி சக நண்பர்கள் மூலம் தகவலறிந்து கொண்ட வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் சிலரும் கலந்து கொண்டனர்.

உள்ளூர் ஊடகவியலாளர்கள் மாத்திரமே அழைக கப்பட்டதன் பின்னணியிலுள்ள - நோக்கம் ஒரு புறமிருக்க,

கதிர்காமர் இச்செய்தியாளர் மாநாட்டில் வெளி யிட்ட கருத்துக்கள் - ஒரு பேரினவாதச் சிந்தனை யுள்ளவரைப் போலவே அமைந்திருந்தது குறிப்பிடத் தக்கது.

சமாதானப் பேச்சுக்கள் உறுதியான தடமொன் றில் முன்னேறிக் கொண்டிருக்கும்போது, வேண்டத் தகாத அபிப்பிராயங்களைத் தோற்றுவிப்பதாக அவரது உரையின் பிரதான சாரம் இருந்த்து.

விடுதலைப் புலிகளிடமிருந்து ஆயுதங்களைக் களைவது பற்றி அடுத்த பேச்சுவார்த்தையில் அர சாங்கம் கவனம் செலுத்த வேண்டும் என அவர் வலியுறுத்தியிருப்பது - யதார்த்தம் புரியாத ஒருவரது பேச்சு என்பதிலும் பார்க்க, விடாப்பிடியாக பிரச்சி னையைத் தூண்ட முனையும் குழப்பவாதி ஒருவரது கருத்தாகவே அமைந்துள்ளது.

கதிர்காமரது கருத்துக்கு - அமைச்சர் ஜி.எல். பீரிஸ் அளித்துள்ள பதிலில் - மரபுப் படையணியாக மாறியுள்ள விடுதலைப் புலிகளிடமிருந்து ஆயுதங்க ளைத் தருமாறு கோருவது வேடிக்கையானது எனக் குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சர் ஜி.எல்.பீரிஸின் பதிலானது, விடுதலைப் புலிகளின் பலம் பற்றிய மதிப்பீட்டின் அடிப்படையில் அமைந்தது என்பதுடன், கதிர்காமரது உண்மை யான நோக்கம் சமாதான முயற்சிகளைக் குழப்புவ தற்கேயானது என்பதையும் குறிப்பிட்டுக் காட்டுவ தாக அமைந்துள்ளது.

விடுதலைப்புலிகள் மரபுவழிப்படையாக வளர்ந் துள்ள பெரும்சக்தி என்பதன் அடிப்டையில், அந்த ப்பலமே பேச்சுக்களின் செல்நெறியையும் தீர்மா னிக்கின்றது என்ற உள்ளார்த்தம் பீரிஸின் பதிலில் வெளிப்படுத்தப்படுகின்றது.

அதேவேளை - கதிர்காமர் விடுதலைப்புலிகளின் பலம் பற்றித் தெரிவிக்கும்போது, இந்து மா சமுத்தி ரத்தில் வலுமிகுந்த கடற்படையாகக் கடற்புலிகள் உருவாகியிருப்பதாகவும் விபரித்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் பலம் பற்றிய இந்த விபரிப்பு- வியப்பின் அடிப்படையிலானதா அல்லது அச்சுறுத் தல் அடிப்படையிலானதா என நோக்குமிடத்து, புலி கள் பலத்தைக் காட்டிப் பேரினவாதிகளின் உணர்வு களைக் கிளறுவதாகவே, கதிர்காமரது போக்கு அமைந்திருப்பதை உணரக்கூடியதாக உள்ளது.

இந்த வகையில், விடுதலைப்புலிகளின் பலம் பற்றிய கதிர்காமரினதும் அமைச்சர் பீரிஸினதும் மதிப்பீடுகள் - கணிப்பீட்டு ரீதியாக சரியாக அமைந்த போதும், அதனையொட்டிய அரசியல் நிலைப்பாடுக ளில், இருவருமே இரண்டு வெவ்வேறு எதிர் நிலைகளில் நிற்பதை அவதானிக்கமுடியும்.

அமைச்சர் பீரிஸ் - விடுதலைப் புலிகள், படையியல ரீதியாகப் பெற்றுள்ள பலத்தை ஏற்றுக்கொண்டு சமாதான வழியை நாடமுனைவதையும்,

கதிர்காமர்- விடுதலைப் புலிகளின் பலத்தைச் சொல்லி, இனவாதிகளிடையே குழப்பத்தை உண்டு பண்ணி, சமாதானத்தைச் சீர்குலைக்க முயல் வதையும் நோக்கமுடியும்.

# ஏ—9 வீதியை புனரமைப்பதற்கு 65 கோடி ரூபா செலவிடப்படும்

## ஆசிய அபிவிருத்தி வங்கி 45 கோடி ரூபா வழங்கும்

(கொழும்பு)

யாழ். -கண்டி வீதி (ஏ-9) புனரமைக்கும் வேலைக்காக 65 கோடி ரூபா செலவிடப்படவுள்ளதாக, இலங்கை தேசிய நிர்மாண சங்கத்தின் தலைவரான டி.டி.விஜேமான கூறியுள் ளார். கொழும்பில் நடைபெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டிலே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:-

இந்த பாதையில் 90 கிலோ மீற்றர் தூரம் புனரமைக் கப்படவுள்ளது. இதற்காகச் செலவிடப்படும் தொகையில் 45 கோடி ரூபாவை ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்கவுள்ளது. புனரமைப்பு வேலைகளுக்கு அங்கு போதிய ஆட்கள் இல் லாததால், தெற்கிலிருந்து தொழிலாளர்களை அழைத்துச் செல்ல நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

# வட-கிழக்கில் கண்ணிவெடி அகற்ற ஐரோப்பிய யூனியன் நிதியுதவி

(லக்ஸம் பேர்க்)

இருபது வருட கால யுத்தத்தின் பின்னர், தமது சொந்த வீடுகளுக்குத் திரும்பும் தமிழ் மக்கள் - தாம் மீளக்குடியமரும் பகுதிகளில், கண்ணிவெடி அச்சுறுத்தலை மிகப் பெருமளவில் எதிர்கொண்டுள்ளதாகவும், இதனை நீக்க - ஐரோப்பிய யூனி யன் தன்னாலான நிதியுதவியைச் செய்யும் எனவும், ஐரோப்பிய யூனியனின் மனிதாபிமான உதவிக்கான பணிப்பாளர் போல் நீல்சன் தெரிவித்தார்.

வட - கிழக்கில் கண்ணிவெடிகளால் பாதிக்கப்பட்டோருக்கு இரண்டு மில்லியன் யூரோ நிதியுதவியை ஐரோப்பிய யூனியன் வழங்கவிருப்பதாகவும் போல் நீல்சன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையொன்றில் - மக்களது குடிமனைகளில் 6 லட்சம் கண்ணிவெடிகள் மற் றும் மிதிவெடிகள் இன்னமும் புதையுண்டிருக்கலாம் என அஞ்சப்படுவதாகவும் -

சராசரியாக ஒரு மாதத்தில் வட-கிழக்கில் பத்து முதல் 15 பொதுமக்கள், தமது வீடுகளைத் துப்பரவு செய்யும் போதோ, தோட்டங்களைப் பயிர்ச்செய்கைக்கு உட்படுத்தும்போதோ,- கண்ணிவெடிகளுக்கு இலக்காகி மரணமடைவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐரோப்பிய யூனியன் இந்த நிதியுதவியோடு - கண்ணி வெடிப் பகுதிகளை இனங்காணுதல், மனிதாபிமான ரீதியில் கண்ணி வெடிகளை அகற்றுதல், கண்ணிவெடிகளின் அச் சுறுத்தல்கள் பற்றிய விழிப்புணர்வை மக்களிடையே பரப்புதல் போன்ற பணிகளிலும் உதவிகளை ஐரோப்பிய யூனியன மேற் கொள்ளும் என்றும், போல் நல்சன மேலும் தெரிவித்தார்.

# கடற்றொழில் அபிவிருத்திக்கு 155 கோடி ரூபா ஒதுக்கீடு

(கொழும்பு)

யாழ்.மாவட்டத்தில் மீனவத்துறையை அபிவிருத்தி செய் வதற்காக 155 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட் டுள்ளதாக, கடற்றொழில் நீரியல் வள அமைச்சர் மகிந்த விஜே சேகர தெரிவித்துள்ளார்.

இந்தப் பகுதில் உள்ள மீனவர்களுக்காக 1000 படகுகளும், 750 தோணிகளும் வழங்கப்பட இருப்பதாக அவர் கூறினார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற கடற்றொழில் நீரியல் வள அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டுக்கான குழு நிலை விவாதத்திலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

# கல்வி அதிகாரிகள் பளுகுறைக்க சீருடைத்துணி விநியோக மாற்றம்

## பாடசாலைகள் கல்வி அமைச்சர் ராஜபக்ஷ தெரிவிப்பு

(திருகோணமலை)

அடுத்த வருட முற்பகுதியில் பாடசாலை மாணவர்களுக் கான இலவச சீருடைகள் யாவும் வழங்கப்பட்டு முடிந்துவிடும். அது போலவே இலவசப் பாடப்புத்தகங்கள் பாடசாலை ஆரம பத்திலேயே வழங்கப்பட்டு முடிந்துவிடும் என பாடசாலைகள் கல்வி அமைச்சர் சுரணிமல ராஜபக்ஷ தெரிவித்தார். நேற்று முன்தினம் திருக்கோணமலைக்கு விஜயம் ஒன்றினை அவர் மேற்கொண்டார்.

திருக்கோணமலை மாவட்ட செயலகத்தில் வடக்கு - கிழகக்கு மாகாண கல்வி, பண்பாடு, விளையாட்டுத்துறை அமைச்சு செயலாளர், வடக்கு - கிழக்கு மாகாண கல்விப்பணிப்பாளர், மாவட்ட செயலாளர், பிரதேச செயலாளர்கள், கூட்டுறவுச் சங்க பொது முகாமையாளர்கள், தலைவர்கள் ஆகியோரைச் சந்தித்து இலவச சீருடை விநியோகம் பற்றி கலந்துரையாடினார்.

அடுத்த வருடத்திற்கான பாடசாலை மாணவர்களுக்கான இலவச சீருடைகளுக்கான துணிகள் இனிவரும் காலங்களில் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவே விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 2003 ஆம் வருடம் தை மாதம் மூன்றாவது வாரத்தில் இந்த விநியோகம் ஆரம்பித்து வைக்கப்பட்டு மாத முடிவுக்குள் வழங்கி முடிக்கப்படும்.

இதுவரை காலமும் சீருடைத்துணிகள் பாடசாலை அதிபர் களுக்கு வலயக் கல்விப் பணிப்பாளர்கள் மூலமாக வழங்கப்பட்டு, அவை மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வந்தது. இந்நடவடிக்கை கல்விப் பணிபபாளர்களுக்கு பெருத்த சுமைகளை ஏற்படுத்தி வந்தது. இந்த நடவடிக்கைகள் காரணமாக அவர்களால் கல்வி, நிர்வாக பணிகளில் முழுமையாக ஈடுபடமுடியாதிருந்தது. இதனை தவிர்க்கும் முகமாகவே இம்முறை தொடக்கம் இந்த பணி பிர தேச செயலாளர்களுக்கு ஒப்படைக்கப்பட்டது என்றார். (04)

## தமக்கு எதிரான போராட்டங்களை

# வீடியோ எடுக்குமாறு ஈ.பி.டி.பி. கோரிக்கை; புலிகளை இனங்காட்டுவதாகவும் தெரிவிப்பு !

(கொழும்பு)

ஈ.பி.டி.பியினருக்கு எதிராக இனிவரும் காலங்களில் நடத்தப்படக் கூடிய எந்தவொரு போராட்டத்தையும் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு, வீடியோ மூலம் பதிவு செய்ய வேண்டும் என்று ஈ.பி.டி.பி கோரிக்கை விடுத்துள்ளது.

இவ்வாறு வீடியோப்படம் எடுத்தால், அதில் புலிகள் பின்னணியில் இருப்பதைத் தம்மால் ஆதார பூர்வமாக நிரூபிக்க முடியும் என்றும் ஈ.பி.டி.பி. கூறியுள்ளது. மேலும் ஐரோப்பிய யூனியனில் உள்ள பிரதான நாடுகளின் பிரதிநிதி களே யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவில் இடம் பெற் றுள்ளனர். இந்த நாடுகள், ஜனநாயகம் மற்றும் மனித உரி மைகள் காப்பு விடயங்களை முக்கிய கடமையாகக் கொள்ள வேண்டும்.

நெல்லியடி ஈ.பி.டி.பி அலுவலகத்தின் மீது தாக்குதல் நடத்த 75 புலிகள் 3 பஸ்களில் வந்ததாகவும், இவர்கள் சநதையில் கூடிநின்ற மக்களைப் பலாத்காரமாகத திரட்டிப் போராட்டத்தை நடத்தியதாகவும் ஈ.பி.டி.பி. போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் கூறியுள்ளது.

# எல்லாவெல மகளுக்கு பிணை அனுமதி மறுப்பு

(கொழும்பு)

தமிழ்ச் சிறுமி ஒருத்தியை வேலைக்கமர்த்தி, சித்திரவதை செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்ட- பிரபல அரசியல்வாதி நந்தா எல்லாவெலலின் மகளுக்கான பிணை அனுமதியை வழங்க நீதிபதி மறுப்புத் தெரிவித்துவிட்டார்.

கொழும்பு உயர்நீதிமன்றத்தில் நடந்துவரும் இது தொடர்பான வழக்கில் - குறிப்பிட்ட சிறுமியை அடித்தும், கத்தியால் எரிகாயங்களை உண்டாக்கியும் கொடுமை செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

நந்தா எல்லாபெலின் மகள் தரப்பில் ஆஜராகிய சட்டத்தரணி, தனது கட்சிகாரருக்கு மன உளைச்சல் ஏற் பட்டிருப்பதால், சிகிச்சை பெற பிணை அனுமதி தருமாறு வேண்டியதற்கு -


தீர்ப்புக் கிடைக்கும்போதே பலருக்கும் இவ்வாறு மன உளைச்சல்கள் ஏற்படும் எனக்கூறி அவரது பிணை மனுவை நீதிபதி தள்ளுப்படி செய்தார்.

# விடுதலைப் புலிகளை மையப்படுத்தும் கொழும்பு;

# தெற்கைத் தீர்மானித்து வரும் வடக்கு - கிழக்கு!

**தெற்குத் திசையினிலே...**

கொழும்பிலிருந்து இந்திரஜித்



இலங்கையின் பொருளாதாரம் கட்டியெழுப்பப்பட வேண்டும் என்பதில் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் உறுதியாக இருக்கிறது. இதற்காக, அந்த முன்னணி பலவழிகளிலும் உதவிகளை நாடி வருகிறது. தமிழீழ விடுதலைப் புலிகளையும் ஒருவகையில் அந்த முன்னணி உதவி நாடலுக்கு உறுதுணையாய் ஏற்றுக்கொண்டிருக்கின்றது. நோர்வே-ஒஸ்லோவில் தமிழீழ விடுதலைப் புலிகளின் பங்கேற்பினால், பல உலக நாடுகள் இலங்கையின் அபிவிருத்திக்கு உதவ முன்வந்தன. அதேபோல, ஜப்பானும் எதிர்வரும் உதவி வழங்கும் மாநாட்டில் பாரிய நிதி உதவிகளை வழங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஐக்கிய தேசிய முன்னணியைப் பொறுத்தவரையில் "ஒரே கல்லில் இரண்டு மாங்காய்கள்'' என்ற பழைய நிலைப்பாட்டைக் கொண்டிருப்பது இங்கு நோக்கக்கூடியதாக இருக்கிறது. தமிழீழ விடுதலைப் புலிகள் இலங்கையின் பொருளாதாரத்தைத் துவம்சம் செய்து கொண்டிருந்தவேளையில், அரசாங்க இயந்திரத்தை ஐக்கிய தேசிய முன்னணி பொறுப்பேற்றது. உலகளாவிய ரீதியில் போராளி இயக்கங்களுக்கு எதிரான நடவடிக்கைகள் முனைப்பாக இருந்தவேளையில் தான் ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சியில் அமர்ந்



சந்திரசேகரன்

தது. எனினும், உலகளாவிய ஆதரவைக் கொண்டு குறிப்பாக, அமெரிக்காவின் ஆதரவைக்கொண்டு இலங்கை அரசாங்கம் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரை முன்னெடுத்திருக்க முடியும். அதற்கான வாய்ப்பும் இருந்தது. எனினும் தமிழீழ விடுதலைப் புலிகளின் வியூகம், போர்த் திறமை, சர்வதேச வலிமை, முன்னர் தமிழீழ விடுதலைப் புலிகளிடம் இருந்து கற்றுக் கொண்ட பாடம் என்பன அரசாங்கத்தைச் சிந்திக்க வைத்தது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் சமாதான அழைப்பைக் கட்டம் கட்டமாக ஐக்கிய தேசிய முன்னணி ஏற்றுக்கொண்டது. இறுதியில் ஜனாதிபதிக்குத் தெரிவிக்காமல்கூட தமிழீழ விடுதலைப் புலிகளுடன் போர் ஓய்வு ஒப்பந்தம் ஒன்று செய்துகொளளப்பட்டது. இவ்வளவுக்கும் காரணம், இலங்கையின் இனப்பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமெனில் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இணக்கம் ஒன்றுக்கு வந்தேயாகவேண்டும் என்ற கட்டாயம் இருந்ததேயாகும்.

கட்டுநாயக்க வானூர்தித் தளம் மீது தமிழீழ விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதல் இலங்கையின் பொருளாதாரத்தை உடனடியான பாரிய பாதிப்புக்கு இட்டுச் சென்றதுடன், எதிர்கால இலங்கையின் பொருளாதாரத்தையும் சீரழிக்கும் நிலையை ஏற்படுத்தியது. இதனை உணர்ந்த இலங்கையின் அரசாங்கம் உடனடி முயற்சிகளை மேற்கொண்டது. இனப்பிரச்சினையைத் தீர்க்கும் அதேநேரம், சீரழிந்துள்ள பொருளாதாரத்தையும் கட்டியெழுப்ப வேண்டுமென்றால் தமிழீழ விடுதலைப் புலிகளை சமமான தரப்பாக ஏற்றுக்கொள்ளவேண்டிய கட்டாயமும் அரசாங்கத்துக்கு நிலைபெற்றது. அதனடிப்படையில் இரண்டு தரப்பினரும் இன்று விட்டுக் கொடுப்புக்களுடன் கடினமாக சமாதானப் பணியை முன்னோக்கி நகர்த்திச் செல்கின்றனர். அதேநேரம், இலங்கையை கட்டியெழுப்பக்கூடிய நிதி உதவிகளையும் பெற்று வருகின்றனர்.

இவ்வாறான ஒரு பயணத்தின் மத்தியில் இலங்கையின் அரசாங்கம் தென்னிலங்கையின் எதிர்க்கட்சிகளுக்கு பதில் சொல்லவேண்டியநிலை ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில், கடந்தவார தென்னிலங்கை அரசியல் பகுதியில் கூறியதைப் போல- GST வரி தொடர்பில், அவ்விடயத்தை உலக வங்கி எடுத்துக் கொண்டதைப் போலவே, அரசாங்கமும் தற்போதைய தென்னிலங்கை எதிர்ப்புகளைக் கவனத்தில் கொள்கிறது. அதாவது போராட்டங்களும், ஆர்ப்பாட்டங்களும் தென்னிலங்கையைப் பொறுத்தவரையில் குறுகியகால ஆயுளைக் கொண்டவை என்ற கருத்தையே அரசாங்கமும் கொண்டிருக்கிறது. இதற்கு ஒரு உதாரணம். தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கம், இதனைத் தென்னிலங்கைக் கட்சிகள் தீவிரமாக எதிர்த்தன. எனினும், இறுதியில் நடந்தது என்ன? தமிழீழ விடுதலைப் புலிகளின் தடையை நீக்கியது தொடர்பில் உதாரணத்துக்கூட தென்னிலங்கைக் கட்சிகள் தற்சமயம் பேசுவதில்லை என்பதைக் குறிப்பிடலாம்.

நாடாளுமன்ற நிலையியற் கட்டளை மற்றும் நாடாளுமன்ற சம்பிரதாயமுறைப்படி செயற்பட வேண்டும் எனக் கூறிவரும் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம், அண்மையில் முதலீட்டுச்சபைத் திருத்தச் சட்ட மூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டபோது, அதில் நிலையியற் கட்டளை பின்பற்றப்படவில்லை என்பதை எதிர்க்கட்சிகள் சுட்டிக்காட்டின. எனினும், அரசாங்கத் தரப்பு அதனை இறுதிவரையிலும் பொருட்படுத்தவேயில்லை. முதலீட்டுச்சபைத் திருத்தத்தை மன்றில் சமர்ப்பித்தது மட்டுமன்றி, அது தொடர்பான வாக்கெடுப்பில் 56 மேலதிக வாக்குகளால் அரசாங்கம் வெற்றியும் பெற்றது. இது எதனைக் காட்டுகிறது? எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பு தொடர்ந்தும் கொண்டுசெல்லப்படாது என்பதையே அது காட்டுகிறது. அதாவது தென்னிலங்கை அரசியல் கட்சிகள் நீண்டகாலப் போராட்டம் ஒன்றுக்குத் தயாரில்லை. அவை அரசியல் நலன்களையே முதன்மைபடுத்துகின்றன என்பது இதிலிருந்து தெளிவாகிறது.

இது இவ்வாறிருக்க, தென்னிலங்கை அரசியலின் பிந்திய தகவல்கள் ஒவ்வொரு நாளும் வெளியாகிக் கொண்டிருக்கின்றன. கடந்த வாரம், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு கொழும்புத் துறைமுகத்தின் ஊடாக எடுத்துவரப்பட்ட- வானொலி உபகரணங்கள் தொடர்பில் தற்சமயம் விவாதங்கள் நடைபெறுகின்றன. இந்த வானொலி உபகரணங்கள் நோர்வே அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுள்ளமையால், நோர்வே தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகச் செயற்பட்டு வருவதாகக் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

அரசாங்கம், தமிழீழம் உருவாக உதவிகளைச் செய்துவருவதாக இந்தக் குற்றச்சாட்டுக்களில் கூறப்பட்டுள்ளன. எனினும், தடைநீக்கப்பட்ட அமைப்பு என்ற ரீதியில் இது தொடர்பில் சட்ட நடவடிக்கைக்கு எவரும் இதுவரை துணியவில்லை. ஏற்கனவே, பலராலும் வலியுறுத்தப்பட்டுவந்த கருத்து ஒன்றுதான்- தமிழீழ விடுதலைப் புலிகள் தமது நிலைப்பாட்டைத் தென்னிலங்கை சிங்கள மக்கள் மத்தியில் எடுத்துச் செல்ல வேண்டும் என்பது. தற்சமயம் அதற்கு வாய்ப்பு கிட்டியிருக்கிறது.



இலங்கை இனப்பிரச்சினை உள்நாட்டுப் பிரச்சினை என்று சொல்லி வந்த பொதுஜன ஐக்கிய முன்னணியும், ஜனதா விமுக்தி பெரமுனவும் தற்சமயம் இந்தியாவை இதில் சம்பந்தப்படுத்த முனைகின்றன. பொதுஜன ஐக்கிய முன்னணி தூதுக்குழு, இலங்கை விவகாரம் சம்பந்தமாக அண்மையில் இந்தியத் தலைவர்களைச் சென்று சந்தித்திருந்தது. அதேபோல, தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வானொலிச் சேவையைப் பரந்துபட்ட அளவில் மேற்கொள்வார்களானால், தென்னிந்திய வானொலிச் சேவைகளில் அது தாக்கத்தை உண்டாக்கும் எனப் புதிய ஒரு விடயத்தையும் பொதுஜன ஐக்கிய முன்னணியினர் தெரிவித்துள்ளனர். 1987 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் இந்தியப் பொருட்களை நுகர்வு செய்ய வேண்டாம் எனக் கட்டுப்பாடுகளை விதித்து வந்த ஜனதா விமுக்தி பெரமுனவும் தற்சமயம் இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வில் இந்தியத் தலையீட்டை வலியுறுத்தி வருகிறது. அண்மையில், கொழும்பில் கொள்கலனுக்குள் இருந்து கண்டுபிடிக்கப்பட்ட இரண்டு வானூர்திகள்- ஊடகங்களில் சில சலசலப்புகளை ஏற்படுத்தியபோதும் அரசாங்கம் அதனை ஒருவாறு முடித்து வைத்திருக்கிறது.

இலங்கையின் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்குச் சமஷ்டி முறையே சிறந்தது என தமிழீழ விடுதலைப் புலிகளும், அரசாங்கமும் ஏற்றுக் கொண்டிருக்கின்றனர். இருப்பினும் அது எவ்வகையான சமஷ்டிமுறை என்பது இன்னும் வரை யறுக்கப்படவில்லை.

'ஜனதா விமுக்தி பெரமுன' இந்த சமஷ்டி அமைப்பையே நிராகரித்துள்ள நிலையில், பொதுஜன ஐக்கிய முன்னணி, எவ்வகையான சமஷ்டித் தீர்வு என்பதைத் தெரிந்து கொண்ட பின்னரே தம்மால் கருத்துக்கூற முடியும் எனக் கூறி வருகிறது. இதனடிப்படையில், பொதுஜன ஐக்கிய முன்னணி ஏதோ ஒருவகை சமஷ்டியை ஏற்றுக் கொண்டிருக்கிறது என்பது வெளிப்படை.

இந்தநிலையில் பொதுஜன ஐக்கிய முன்னணிக்குள் பிளவு ஏற்படும் ஆபத்து ஒன்று குறித்துத் தகவல்கள் கசியத் தொடங்கியுள்ளன. அணமையில், நுவரெலியாவில் அமைந்துள்ள ஜனாதிபதி மாளிகையில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது. இதில் ஜனாதிபதி, அவரின் வெளியுறவுத்துறை ஆலோசகர் லக்ஷ்மன் கதிர்காமர் மற்றும் முன்னணியின் பேச்சாளர் சரத் அமுனுகம ஆகியோர் பங்குகொண்டனர்.

இலங்கை இனப்பிரச்சினை தொடர்பில் அரசாங்கமும், தமிழீழ விடுதலைப் புலிகளும் ஏற்றுக் கொண்ட சமஷ்டித் தீர்வு, தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவரின் மாவீரர் உரைக் கருத்துக்கள், அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் லண்டனில் தெரிவித்ததாகக் கூறப்படும் இரண்டு தேசக் கொள்கை என்பன சம்பந்தமாக இந்தக் கலந்துரையாடலில் தீர்க்கமான சில முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த முடிவுகளை பொதுஜன ஐக்கிய முன்னணியின் கருத்துக்களாக வெளியிட வேண்டுமென இவர்கள் மூவரும் தீர்மானித்தனர். எனினும், கொழும்பு திரும்பிய அவர்களுக்கு சாதகமான நிலை ஒன்றை எட்ட முடியாமற்போய்விட்டது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன், பிரிவினைக் கோரிக்கையைக் கைவிட்டு, சமஷ்டிக்கு இணக்கம் தெரிவித்திருப்பது வரவேற்கக்கூடியது. இந்தநிலையில் அதற்கு எதிராகத் தீர்மானம் ஒன்றை வெளியிடுவது ஆரோக்கியமானதல்ல என லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவர் பட்டி வீரக்கோன் தமது கருத்தை வெளிப்படுத்தியுள்ளார்.


இவரின் கருத்து பொதுஜன ஐக்கிய முன்னணிக்குள் விரிசலை ஏற்படுத்தியிருக்கிறது. இந்த விரிசல், தற்சமயம் பொதுஜன ஐக்கிய முன்னணியில் இருந்து லங்கா சமசமாஜக் கட்சி வெளியேறும் நிலையைத் தோற்று வித்துள்ளது.

நாடாளுமன்றத்தில் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் 2003 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை நிறைவேற்றியுள்ளது. ஆரம்பத்தில் இந்த வரவு செலவுத் திட்டம் தோல்வியடையும் என எதிர்பார்க்கப்பட்டபோதிலும் வரவு செலவுத் திட்ட 2ஆம் வாசிப்பின்போது எதிர்க்கட்சிகள் யோசனைகளைத் தெரிவிக்காதபடியால், நாடாளுமன்ற நிலையியற் கட்டளையின்படி அரசாங்கம் விவாதங்கள் இன்றியும் வாக்கெடுப்புகள் அதிகமின்றியும் வரவு செலவுத் திட்டப் பரிந்துரைகளை நிறைவேற்றிக் கொண்டது.

2002ஆம் ஆண்டு டிசம்பர் 5 ஆம திகதியை அனைவரும், அரசாங்க மாற்றத்திற்கான திகதியாகவும், நாடாளுமன்றக் கலைப்புத் திகதியாகவும் எண்ணியிருந்தபோதிலும், நடைமுறை அரசியல் மாற்றங்கள் பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஜனாதிபதிக்கோ அல்லது ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்துக்கோ அதற்கான வாய்ப்பை அளிக்கவில்லை.

இவ்வாறான சூழ்நிலை ஒன்றில் எதிர்வரும் மார்ச் மாதமளவில் மாற்று அரசாங்கத்தை அமைக்க முடியும் என பொதுஜன ஐக்கிய முன்னணி எதிர்பார்க்கிறது. இதற்காக, அந்த முன்னணி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அதாவுல்லா பிரிவினரைத் தம்வசப்படுத்தும் முனைப்புகளை எடுத்து வருகிறது. இதனை முன்னிட்டே ஜனாதிபதியும் தற்சமயம் நாடெங்கிலும் பிரசாரக் கூட்டங்களை நடத்தி வருகிறார்.

மறுபுறத்தில்- ஐக்கிய தேசிய முன்னணியின் சிரேஷ்ட அமைச்சர்கள், ஜனவரி மாதம் முதல் மக்களை நேரில் சென்று சந்திக்கவிருக்கின்றனர். ஜனாதிபதி மாற்று அரசாங்கம் ஒன்றுக்கான முயற்சியை எடுப்பாரா



சரத் அமுனுகம

னால், அதனை முறியடிக்கும் வகையில் இந்த முன்னெடுப்பு மேற்கொள்ளப்படவிருக்கிறது. அதேநேரத்தில், சர்வதேச நிதியுதவிகளைக் கொண்டு பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களைச் செயற்படுத்துவதன்மூலம் மக்களைத் தொடர்ந்தும் தமது பக்கம் வைத்திருக்க முடியும் என அரசாங்கம் எண்ணம் கொண்டிருக்கிறது.



ஹக்கீம்

அதேநேரம்- ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தொடர்ந்தும் பிளவுபட்ட நிலையில் இருந்து வருகிறது. காங்கிரஸின் பிரிவுக்குப் பல்வேறு பின்னணிகள் பற்றித் தெரிவிக்கப்பட்டபோதிலும், அந்தப் பின்னணிக் காரணிகள், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பலத்தை இழக்கச் செய்திருக்கின்றன.

மலையகத்தில் அந்த மக்களின் பிரச்சினைகளைச் சர்வதேச மட்டத்தில் வெளிக்கொணருவதில் மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் அமைச்சருமான பி.சந்திரசேகரன் முன்னெடுப்புகளை எடுத்து வருகிறார். இதன் ஒரு கட்டமாக அவுஸ்திரேலிய நீதியரசர் ஒருவரை அழைத்து வந்து மலையக அவலங்களைக் காட்டுவதில் அவர் வெற்றி கண்டுள்ளார். எனினும், இதற்கு மாறான கருத்தையே அதிக தொழிலாளர் பலத்தைக் கொண்டுள்ள அமைச்சர் ஆறுமுகம் தொண்டமானின் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கொண்டிருக்கிறது.

மலையகப் பிரச்சினைகள் சர்வதேசமயப்படுத்தத் தேவையற்றவை. அவற்றை உள்நாட்டிலேயே தீர்த்துக்கொள்ள வேண்டும் என காங்கிரஸ் தெரிவித்து வருகிறது.

மலையகத்தில் இரண்டு பெரிய கட்சிகளான மலையக மக்கள் முன்னணி, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஆகியவற்றுக்கிடையில் இணக்கம் ஏற்படுவது எதிர்பார்க்க முடியாததொன்றாகக் கருத வைக்கின்றது. ■

# முகமாலை பாதுகாப்பு உப-குழுக் கூட்டத்திலிருந்து...


புலிகளின் பிரதிநிதிகள் வரவேற்கப்படுகின்றனர்


பேச்சுக்கு வரும் புலிகள்


நோர்வே தூதருடன் சரத் பொன்சேகா


கேணல் ஜெயத்துடன் எழிலன்


கேணல் தீபனும் இளம்பரிதியும்


கேணல் கருணாவுடன் கேணல் தீபன்


பிரிகேடியர் பாலசூரிய


மேஜர் ஜெனரல் கொட்டேகொட


கிழக்கு எஸ்.ரி.எவ். உயரதிகாரி


குறூப்கப்டன் ஹேரலித குணதிலக


ரியர் அட்மிரல் சரத் வீரசேகர


பேச்சுக்களில் அரச பிரதிநிதிகள்


பேச்சுவார்த்தை மேசையில் இருதரப்பும்


பேச்சுக்களின் போது புலிகள் தரப்பினர்


திலக்- கௌசல்யன்


ஆலோசனையில் மஜீத் - பொன்சேகா


ஒஸ்ரினுடன் புலித்தேவன்

படங்கள் - லிவிங்ஸ்டன்


புதுக்கடை திறப்பு விழா

மதி கலர்ஸ் ஸ்கிறீன் பிறிண்ரிங்

MATHI COLOURS

Wedding Cards, Birthday Cards, Greeting Cards, Visiting Cards
Items Printing & Sales.

கிளை:- 15.12.2002 இன்று காலை 10 மணிக்கு

B15/2, முருகேசர் லேன், நல்லூர், யாழ்ப்பாணம். B/440 பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# புன்னாலைக் கட்டுவன் வடக்கில் மீளக்குடியமர அனுமதி இல்லை

## யாழ்.இராணுவத் தளபதி அறிவிப்பு

புன்னாலைக்கட்டுவன் வடக்குப்பகுதியில் மீளக்குடியமர்ந்த மக்களை, இராணுவம்- அப்பகுதியிலிருந்து வெளியேற்றிய சம்பவம் தொடர்பாக நேற்று மாலை பலாலி இராணுவத்தளத்தில் கூட்டமொன்று நடைபெற்றது.

பாதுகாப்பமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோ, யாழ் பிராந்திய இராணுவத்தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா, அமைச்சர் மகேஸ்வரன் ஆகியோர் நேற்று மாலை ஆறு மணியளவில் இது தொடர்பாகக் கலந்துரையா டினர்.

அச்சமயம் தமது பாதுகாப்பு வலயத்திலிருந்து 600 மீற்றர் தூரம் வரை மக்கள் மீளக்குடியமர அனுமதிக்க முடியாதென மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா உறுதியாகக் கூறிவிட்டதாக சந்திப்பில் பங்குபற்றிய அமைச்சர் மகேஸ்வரன் தெரிவித்தார்.

### விடுதலைப்...

நாடுகள் மிக உன்னிப்பாக அவதானித்து வருகின்றன.

இதனால் விடுதலைப்புலிகள் மீதான தடையை அமெரிக்கா, பிரிட்டன் ஆகியன நீக்குவதற்கு முன் வரலாம். அதற்கான சாத்தியங்கள் இல்லையென்றும் கூறிவிட முடியாது, என அமைச்சர் பீரிஸ் மேலும் தெரிவித்தார்.

### ஈ.பி.டி.பி..

யாளர்களிடம் பேசும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். உண்மையான ஜனநாயகவாதிகள் என்றால் பொதுமக்கள் அவர்களை வெறுக்கமாட்டார்கள். மக்களின் விருப்புக்கு மாறாக செயற்படும் அவர்களை அங்கிருந்து வெளியேற்றுவதற்கு அரசு உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் சமாதானம் ஏற்பட்ட பின்னர் தான், ஈ.பி.டி.பியினரின் மேற்படி பிரச்சினை உருவாகியது. மக்களின் விருப்புக்கு மாறாக அவர்கள் செயற்பட்டுவருகின்றனர். எனவே அவர்களை அங்கிருந்து வெளியேற்ற அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். மேற்படி விடயம் குறித்து ஒஸ்லோவில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் போதும் பேசினோம். ஈ.பி.டி.பியினருக்கு பின்னணியில் இருந்து சமாதானத்தைக் குழப்பும் வகையில் யாரோ செயற்படுவதாக நாம் சந்தேகிக்கின்றோம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (க,லி)

ஆய அலுவலர், ஆய உதவியாளர் பணி நிலைகளுக்கான
நேர்முகத் தேர்வு
16.12.2002 காலை 10 மணி தொடக்கம் 1 மணிவரை
பளை ஆயப்பகுதிக் கண்காணிப்பு நிலையத்தில் நடைபெறும்
நேர்முகத்தேர்வின்போது சுயவிபரம் உட்பட அனைத்து கல்வித் தகைமைச் சான்றுடனும் சமூகம் தரவும்
மனிதவள அலகு,
ஆயப்பகுதி,
தமிழீழ விடுதலைப்புலிகள்
விண்ணப்பித்த அனைவரும் சமூகம் தரவும்
(066)

### தீர்வுக்கு...

முன்னர் நடத்தப்பட்ட பேச்சுக்கள், தோல்வி கண்டமைக்கு சரியான திட்டங்கள் இல்லாமையே காரணம். சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்பட ஆரம்பித்த பின்னர்தான் நாடு ஒன்றுபட்டிருக்கின்றது.

தேவேந்திர முனையில் இருந்து பருத்தித்துறை வரை இப்போது அனைத்து மக்களும் சென்று வர முடிகின்றது. இது வரலாற்றுத் திருப்பு முனையான கால கட்டம்.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் இறுதிக்கட்டத்தை நாம் அடைந்திருக்கிறோம். கட்சி நலன்களுக்கு அப்பால் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு நாம் பாடுபடுகிறோம்.

1960, 70களில் இருந்த சிங்களத் தலைவர்கள் விட்ட தவறு தான், இந்த யுத்தத்துக்கு காரணமாக அமைந்தது. சிங்களத் தலைமைகளை ஏற்கமாட்டோம் எனச் சொல்லி வந்த தமிழர்கள் பொறுத்திருந்து பார்த்தே - ஆயுதமேந்திப் போராடினார்கள்.

19 வருட யுத்தத்தை ஒரு வருடத்தில் முடிவுக்கு கொண்டு வந்திருக்கிறோம். இச்சந்தர்ப்பத்தை விட்டால் நாடே அழிந்து போய் விடும். எதுவும் மிச்சமாக இருக்காது.

இதனால் தென்பகுதி மக்கள் பொறுமைகாத்து முழுமையான ஆதரவை வழங்கவேண்டும்.

இப்போது மைதானத்தில் கடைசி ஓவரில் கடைசிப் பந்து வீசப்படுகிறது. இதில் சிக்ஸர் அடித்தால், தான் நாம் சமாதானத்தை தோற்றுவிக்க முடியும் எனவும் ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்தார்.

நேற்றைய கூட்டத்தில்- புரிந்துணர்வு உடன்பாட்டிற்கு உள்ளிட்ட சமாதான முயற்சிகளுக்கு ஆதரவு தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை- குடாநாட்டில் படையினரின் உயர்பாதுகாப்பு வலங்கள் அகற்றப்படாமையைக் கண்டித்து, கட்சியின் யாழ்.மாவட்ட பிரதிநிதிகள் எவரும் பொதுக்கூட்டத்தில கலந்து கொள்ளவில்லை என்று அமைச்சர் மகேஸ்வரன் தெரிவித்தார்.

### இறுக்கமான...

வழங்க, விடுதலைப் புலிகளின் தரப்பு பிரதிநிதிகளின் வாகன அணி பேச்சு நடைபெறும் சூனியப் பிரதேசத்திற்கு வந்த நேரத்தில், மழை கொட்டியதனால் குடை பிடித்தவாறு விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர்கள் பேச்சு நடைபெறும் கொட்டகைக்கு வருகை தந்தார்கள். இவர்களை, ஏற்கனவே இவ்விடத்தில் தயார் நிலையில் நின்ற இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் வெஸ்ட்போர்க், இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஜெனரல் புறூவ் ஹோவ்டே மற்றும் போர் நிறுத்த கண்காணிப்புக்குழுவின் யாழ். மாவட்டத் தலைவர் ஒலே புறுண்டம் ஆகியோர் கைலாகு கொடுத்து வரவேற்றனர்.

பின்னர் காலை 9.30 மணியளவில் அரச தரப்பினர் பேச்சு நடைபெற்ற கொட்டகைக்கு வந்தனர். இவர்களை ஏற்கனவே வந்த புலிகள் தரப்பினரும் இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் வெஸ்ட்போர்க் மற்றும் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் புறுவ் ஹோவ்டே ஆகியோர் கைலாகு கொடுத்து வரவேற்றனர்.

நேற்றுக்காலை 9.45 மணியளவில் ஆரம்பமான பாதுகாப்பு உப குழுவின் முதல் அமர்வு - நண்பகல் 1.30 மணியளவில் மதிய இடைவேளைக்காக நிறுத்தப்பட்டது. இருதரப்பினரும் பேச்சு நடைபெற்ற கொட்டகையை விட்டு வெளியே வந்தனர். பின்னர் மீண்டும் மாலை 3 மணியளவில் இரண்டாம் அமர்வு ஆரம்பமாகி சிறிது நேரத்தின் பின், தேனீர் இடைவேளையைத் தொடர்ந்து மாலை 6 மணிக்கு பாதுகாப்பு உப குழு வின் நேற்றைய கூட்டம் நிறைவடைந்தது. நேற்றைய இப் பாதுகாப்பு உப குழுக் கூட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் தரப்பில் மூத்த தளபதி கேணல் கருணா தலைமையில- விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலணியைச் சேர்ந்த புலித்தேவன் மற்றும் வடபோர் முனை கட்டளைத் தளபதி கேணல் தீபன், தென்முனைக் கட்டளைத் தளபதி கேணல் ஜெயம், கடற்புலிகளின் துணைத் தளபதி செழியன், யாழ். மாட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி, வவுனியா மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் எழிலன், மட்டு-அம்பாறை அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன், மன்னார் மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் அமிதாப், திருகோணமலை அரசியற்துறைப் பொறுப்பாளர் திலக் ஆகியோரும், அரச தரப்பில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்டின் பெர்ணான்டோ தலைமையில் மேஜர் ஜெனரல் சாந்த கொட்டேகொட, யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா, யாழ்.மாவட்ட கடற்படைத் தளபதி றியர் அட்மிரல் சரத் வீரசேகர, விமானப்படை குறூப் கப்டன் ஹோலித குணதிலக, பிரிகேடியர் பாலசூரிய, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அப்துல் மஜித், வட பிராந்திய சிரேஷட பொலிஸ் அத்தியட்சகர் பிரேமரடண ஆகியோ ரும் கலந்து கொணடனர்.

மேலும்- இலங்கைக்கான நோர்வே தூதுவர் வெஸ்ட்போர்க், இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் புறூவ் ஹோவ்டே, போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ்.மாவட்ட பொறுப்பதிகாரி ஒலே புறுண்டம் ஆகியோரும் மேற்படி பாதுகாப்புக் குழுக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

### ஒரு மாத...

குள் முழுமையான மீள்குடியேற்ற நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டும். இல்லையேல், பாதுகாப்பு உபகுழுக் கூட்டங்களை நடாத்துவதில் எதுவித பயனும் இல்லை. எனவே மேற்படி நடவடிக்கையை அரசு மேற்கொள்ளாவிடின் அடுத்து வரும் பாதுகாப்பு உபகுழுக்கூட்டங்களில் நாம் பங்குபற்றப் போவதில்லை. இக் கூட்டங்களில் பங்கு பற்றி தீர்க்கமான நடவடிக்கைகள் எதுவும் இல்லாமல்- சிரித்துக் கதைத்து உணவையும் தேநீரையும் அருந்தி விட்டுச் செல்வதில் எந்தப் பயனும் இல்லை" என்று மிகவும் கண்டிப்பான தொனியில் தெரிவித்தார்.

நாம் கேட்டுக் கொண்டதன்படி மீள்குடியேற்றப்பகுதியை அரசு பிரகடனம் செய்ததும், அங்கு மக்களை மீள் குடியமர்த்துவது தொடர்பான விடயங்களை எமது தளபதி கேணல் தீபனும் யாழ்.படைத் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகாவும் கையாளுவார்கள்.

அரசு பிரகடனம் செய்யும் மீள் குடியேற்றப் பிரதேசம், பொது மக்கள் செறிவாக வாழ்ந்த அல்லது வாழக்கூடிய பிரதேசமாக இருக்க வேண்டும் என்றும் கேணல் கருணா தெரிவித்தார்.

கிழக்குப்பகுதியில் புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கு பின்னர் இயல்பு நிலை தோன்றுவதில் முன்னேற்றம் ஏற்பட்டு வருகிறது. ஆனால், யாழ். மாவட்டத்தைப் பொறுத்தவரை யில் எதுவித முன்னேற்றமும் ஏற்படவில்லை. எனவே, இவ்விடயத்தில் அரசு உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும், இல்லையேல்- நாம் இவ் உபகுழுக்கூட்டங்களில் பங்குபற்றுவதை விடுத்து வெளிநாடுகளில் நடைபெறும் சமாதானப் பேச்சுக்களின் போது இவ்விடயம் குறித்துப் பிரஸ்தாபிப்போம் என்றும தளபதி கேணல் கருணா மேலும் தெரிவித்தார். (க,லி)

எமது ஈழமண்ணின் வன்னிப் பெருநிலப்பரப்பில் உள்ள
ப.நோ.கூ. சங்கங்களுக்கு
லாலாவின் நன்றிகள்
சங்கங்களின் தலைவர்கள், முகாமையாளர்கள், களஞ்சியப் பொறுப்பாளர்கள், கிளை முகாமையாளர்கள், உதவியாளர்கள், கொள்முதல் பொறுப்பாளர்கள் அனைவரும் முகங்கோணாமல், தட்டிக் கழிக்காமல் சாக்குப் போக்குச் சொல்லாமல் அன்பு கலந்த இதய சுத்தியோடு முழுமனத்துடன் தரும் ஆதரவுக்கு நாம் என்றென்றும் கடமைப்பட்டவர்கள்.
லாலா சோப் எமது தயாரிப்பான சண்சயின் சோப்
உற்பத்திக்கு இவர்கள் காட்டும் கரிசனையும், ஆதரவும், ஊக்கமும் எமக்கு என்றென்றும் தேவை. தொடர்ந்தும் எமக்கு ஆதரவளித்தால் தான் கைத்தொழில் வளத்தைப் பெருக்கி பலருக்கு நாம் வேலைவாய்ப்புக்களை வழங்கமுடியும். அதன் மூலமே எமது உற்பத்திகளும் ஈழமண்ணில் நல்ல வளம் பெறும் என்பதை அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.
ஈழ வன்னிப் பெருநிலப்பரப்பில் வாழும் மக்களுக்கும் எமது இதயபூர்வமான நன்றிகள்.
லாலா சோப் தொழிந்சாலை
அச்சுவேலி.
(சி-310)

General Information Technology - GIT
Drive Your IT on GIT
Syllabus Covers "London A/L" Computing
O/L முடித்த A/L மாணவர்களுக்கான கணனி வகுப்புகள்
GIT
MS Office
Internet for A/L
என்பவற்றை உள்ளடக்கியது
ஆரம்பம்
18-12-2002
No Scholarships!
But Less Charges!!
Gain International Standard!!!
பதிவுகளுக்கு STP Computer World (Pvt.) Limited.
54A, Palaly Road, Kantharmadam, Jaffna
Branch
Sankaththanai, Chavakachcheri

இப்பத்திரிகை - இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 15.12.2002 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.